
# சந்நிதி


பல்சமய காலாண்டிதழ் வைகாசி' 99







சிவகாமி அம்மாள்
பப்ளிகேஷன்ஸ்



There is only One Religion;

The Religion of Love.

There is only One Caste;

The Caste of Humanity.

There is only One Language;

The Language of the Heart.

There is only One God;

He is Omnipresent.

*For comfortable rooms*
*with all facilities*
*at a very reasonable rate*

# HOTEL SINSAPA INN

**36, Sinsapa Road, Wellawatta.**
**Phone : 590515, 580947**

# UTHAYA GUEST HOUSE

**58, Harmers Avenue, Wellawatta.**

# SHRINE
# சந்நிதி

பல்சமய காலாண்டிதழ்

மலர் 2 இதழ் 6

வைகாசி 99



ஆசிரியர்
வே.வரதசுந்தரம்





வெளியீட்டாளர்கள்
சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ்

39, 36வது ஒழுங்கை
கொழும்பு - 06
இலங்கை
தொலைபேசி: 596253


## ஆன்மீக நெஞ்சங்களே

இவ்விதழ் பிள்ளையார் மலராக விரிந்து நல்ல கருத்துக்களாம் நறுமணத்தை வீசத் திருவருள் கைகூடியுள்ளது.

முன்னட்டையில் பிள்ளையார், பகவான் சாயி பாபா ஆகியோரின் அருட் பொலிவு கண்டு மெய் மறக்கிறோம் உள்ளே பிள்ளையார் அதிசயம், பிள்ளையார் தத்துவம், பிள்ளையார் வழிபாடு, பிள்ளையார் பற்றிய கதைகள், இன்னோரன்னவை கருத்துக்கு விருந்தாக அமைந்து பக்தி உணர்வை ஊட்டுவதைக் காணலாம்.

இலங்கையில் எங்கு சென்றாலும், பிள்ளையாரைக் காணலாம். தமிழர், சிங்களவர் இருசாராருக்கும் இயைபுடையது பிள்ளையார் வழிபாடு. பிள்ளையார் வழிபாடு உலகளாவியது. இதனாலே பல்லின, பலதேச நல்லுறவுக்கு ஒருமைப்பாட்டுக்கு உகந்ததாக பிள்ளையார் வழிபாடு அமைகிறது.

பிள்ளையார் சுழி போட்டு பிள்ளையாரை வணங்கி நாம் எந்தக் காரியத்தையும் ஆரம்பிப்போம். பிள்ளையாரை நம்பினால், நாடினால் கல்வி ஞானம் கூட இலகுவில் கைகூடிவிடும்.

இதனைத் திருவருட் பயனில் காணப்பெறும் குறட்பா அழகாக விளக்குகிறது.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்

நும்பணியில்
வே.வரதசுந்தரம்
ஆசிரியர்

27/5/99.

## மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்

மட்டக்களப்பில் முதியோர் இல்லமொன்றை அமைக்க முன் வந்துள்ளது.

எங்கள் பண்பாட்டில்,

| |
|---|
| பெற்றோரைக் காப்பது பிள்ளையின் கடனே<br>முதியோரைக் காப்பது இளையோரின் கடனே. |

இன்று,

* இன வன்செயலிற் பிள்ளைகளை இழந்து விட்ட முதுமையுற்ற பெற்றோரைக் காக்க வேண்டாமா?
* வலுவிழந்து வறுமையில் வாடும் முதியோரைக் காக்க வேண்டாமா?
* வாரிசுகள் உறவினர்கள் இல்லாத முதியோரைக் காக்க வேண்டாமா?
* வளமிருந்தும் துணையில்லாது தனிமையில் வேதனையுறும் முதியோரைக் காக்க வேண்டாமா?

இவ்வாறு பல வினாக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.வினாக்களைக் கேட்டுக் கேட்டே காலம் வீணாகிப் போகிறது. ஆகவே, விடை காணும் நோக்கில் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தினராகிய நாம் முதியோர் இல்லத்துக்கான அடிக்கல்லை 1997. 10. 20 ஆந் திகதி மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மகராஜ் அவர்களைக் கொண்டு நாட்டி வைத்தோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த முதியோர் இல்ல நிருமாணிப்பிற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை இருபத்தாறு மில்லியன் ரூபாயாகும்.

இம்மைக்கும் மறுமைக்கும் துணை நிற்கும் இந்த நற்பணிக்கு உங்கள் உதவியைப் பெருமனதோடு எதிர்பார்க்கும் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், உங்கள் உதவியை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது.

1. பணம்
2. கட்டிடத்துக்கு தேவையான பொருள்கள்
3. கட்டடத்தின் ஒரு பகுதியை முடித்துத் தருதல்.


இவற்றுள் ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ நீங்கள் செய்வீர்களென்று மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

எண்ணம் ஈடேற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

வங்கிக் கணக்கு இல:- உ 9190
வங்கி:– இலங்கை வங்கி மட்டக்களப்பு.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்,
41, தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு.
இலங்கை.

# இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில் மகோற்சவ மலர், 1999



### திருவலிவலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## இணுவில் பிள்ளையார்





பாலவிநாயகர்



கஜலக்குமி



உ

சிவமயம்

குருபாதம்

நல்லை.திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த

பரமாசார்ய ஸ்வாமிகள்

(இரண்டாவது குரு மகா சந்நிதானம்)

அருளாசிகள்

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் அருள்மிகு பரராசசேகரவிநாயகர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு "சந்நிதி" என்னும் திருமலர் முதன்மை கொடுப்பது அறிந்து அகமகிழ்கிறேன்.

ஈழத்திருநாட்டில் எழுந்தருளியிருக்கும் விநாயகர் ஆலயங்களில் மிகப்பழைய தலமாக இத்தலம் விளங்குகிறது. ஆகமச்சிறப்பைப் பேணும் இத்தலத்தை அடியார்கள் காலத்துக்கு காலம் புனர் நிர்மானம் செய்து அழகுப் பொலிவோடு பேணி வருகிறார்கள். விநாயகரின் திருவருள் கடாட்சத்தால் இணுவைத் திருப்பதி புண்ணியப்பதியாக விளங்குகிறது. தான தர்மங்கள் தழைத்து ஓங்குகின்றன. சீரும் திருவும் பொலியும் இத்திருவூர்ச் சிறப்புக்கு மூலனாய் விளங்கும் பரராசசேகரன் பாதம் பணிந்து நாட்டில் நல்லன சிறக்க வேண்டி ஆசி கூறி நிறைவு செய்கிறேன்.

என்றும் இன்பம் பெருகுக

---



நகைச்சுவை எழுத்தாளர்
நாவலாசிரியர்
பொ.சண்முகநாதன்.
கந்தரோடை
யாழ்ப்பாணம்

## வளரட்டும் சந்நிதி
## தொடரட்டும் பணி!

சந்நிதி தொடர்ந்து புது மெருகுடன் வெளிவந்து கொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதழைப் பார்த்தாலே வாங்கத் தூண்டுகிறது.

வாங்கியதும் படிக்கத் தோன்றுகிறது.

படித்ததும் பேணிப் பாதுகாக்கவேண்டிய பெட்டகமாகத் திகழ்கிறது.

இவ்வேளையில் சந்நிதியின் தேவையும் பயனும் மிகவும் பெரியதே!

வளரட்டும் சந்நிதி ! தொடரட்டும் உங்கள் பணி!

# ஆசிச் செய்தி



சமயம் என்பது மனிதனைப் புனிதனாக்கி இனிமையான வாழ்வைத் தரும் ஊடகமாகும். சமயப்பணிகளை வளர்த்தால் சமூகம் பல நன்மைகளை அடையும்.

திருக்கோவில்கள், தெய்வ சந்நிதிகள் என்பன சமய வாழ்வின் தளங்களாக விளங்குகின்றன.

சமய உண்மைகளையும், தொன்மைகளையும், நன்மைகளையும், மேன்மைகளையும் எடுத்து விளக்கும் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் கூட ஒரு மனிதனுக்கு சமயத்தில் பெரும் உதவியாக இருக்கும்.

அந்த வகையில் இருமொழிகளில் வெளிவரும் சந்நிதி என்னும் சஞ்சிகை எமது சமய வாழ்விற்குக் கிடைத்த பெருநிதியாகும்.

சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்த குருக்கள்
பிரதமகுரு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
இணுவில்.

எமது பண்பாட்டின் கலசமாக இம்மலர் திகழ வேண்டும் என ஆசி வழங்குகிறேன். இம்மாத மலர் பரராஜ சேகரப் பெருமானின் மஹோற்சவ சிறப்பு மலராக வருவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

அறிவு மலர அன்பு மலரும்! அன்பு மலர அருள் மலரும்!




சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

## அருளாசிகள்

அருட் சிறப்பும் செல்வச் சிறப்பும் நிறைந்து விளங்கும் இணுவையம்பதியில் அற்புதத் தெய்வமாய் அருள்பாலித்து வரும் பரராசசேகர விநாயகரின் பெருமையை அறியாதவர்கள் இல்லை. பலநூறு வருடம் பழமை வாய்ந்த இத்திருத்தலம் விநாயகரின் மீளா அடியவர்களால் மிகப் புனிதமாகப் பேணப்படுவதை யான் அறிவேன்.

இணுவில் மக்கள் பக்தியிலும் பாரம்பரிய கலை மரபுகளைப் பேணுவதிலும் வல்லவர்கள். இத்திருத்தலத்தில் பல தடவைகள் உரையாற்றுகின்ற வாய்ப்புப் பெற்ற யான் இவ்வாலய பூஜை, பிரார்த்தனை ஒழுங்குகளைக் கண்டு ஆனந்தமடைவேன். இப்புனிதமான திருத்தலத்தை தொடர்ந்து சிறப்பாகப் பேணிப் போற்றுதல் செய்ய வேண்டியது அடியார்களின் கடமையாகும். எம்மை வாழ்விக்கும் ஞான முதல்வனின் அடிபோற்றி என் பிரார்த்தனையையும் ஆசியையும் கூறி அமைகிறேன்.

# குட்டிக் கொள்ளல்



முனிவர்களுள் முதல்வராகிய அகத்திய முனிவர் சிவபெருமானிடம் இருந்த காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென்திசை நோக்கி வருவாராய் குடகு மலையில் சிவபூசை செய்து கொண்டு இருந்தார்.

அப்போது இந்திரன் சீகாழியில் பூசை செய்து கொண்டிருந்தான். மழையின்றி நந்தவனம் வாடியது.

நாரத முனிவர் இந்திரனைப் பார்த்து, "அகத்தியருடைய கமண்டலத்தில் உள்ள காவிரி பெருகுமானால்உன் பூங்கா பொலிவு பெறும்;"என்று கூறினார்.

இந்திரன் விநாயகரை வழிபட்டு வேண்டிக் கொண்டான். விநாயக மூர்த்தி காக்கை வடிவுடன் சென்று காவிரி யடங்கிய கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் காகத்தை கரத்தால் ஓட்டினார். காகம் காலால் உந்திப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து காவிரி பெருக்கெடுத்து ஓடியது.

அகத்தியர் காகத்தின் மீது சீறிப்பாய்ந்தார். அது அந்தணச் சிறுவனாகி நின்றது. அச்சிறுவனை இருகரங்களாலும் குட்டும் பொருட்டு குறுமுனி ஓடினார். பிள்ளையார் அவருக்கு அகப்படாமல் அங்கும் இங்குமாக ஓடினார். அகத்தியர் அச்சிறுவனை அணுகிக் குட்டுவதற்கு இரு கரங்களையும் ஓங்கினார்.ஐங்கரங்களுடன்விநாயகர் காட்சி தந்தருளினார்.அகத்தியர் திகைத்து நடு நடுங்கினார்.

"ஓங்காரப் பொருளே! வேத வித்தகனே! உன்னைச் சிறியேன் அறியேனாகிக் குட்டுதற்குக் கையை ஓங்கினேனே. என்னே என் சிறுமதி "என்று தன் சென்னியிலேயே குட்டிக் கொண்டார். விநாயகர் அவருடைய கரங்களைப் பற்றிக் கருணை புரிந்தார். "இன்று முதல் நம் திருமுன் பயபக்தியுடன் சென்னியில் குட்டிக் கொண்டோர் சீரிய மதியும், சீரிய நிதியும் பெறுவார்கள;" என்று வரமளித்தருளினார் .இதனால், விநாயகரின் திருமுன் அடியார்கள் சிரத்தில், குட்டிக்கொள்ளும் மரபு உண்டாயிற்று.

(பின்புற அட்டைப்பட விளக்கக் கதை)

திருமுருக கிருபானந்த வாரியார்
சுவாமிகள்

# இணுவை

# பிள்ளையார் மாலை



அணுவில் மகத்தை யடக்கியெந் நாளும்
இணுவில் இலகியெமை யாளும் - குணமணிழும்
சீரார் பரராச சேகரப் பிள்ளையார்
பேரார் பெருமைகளைப் பேசு!

செல்வக் கணபதியே சித்தி விநாயகனே
கல்விக் கடலேஎன் கண்மணியே - வெல்லுஞ்சொல்
ஈந்துன்னைப் பூசிக்கும் இன்பந் தரவேண்டும்
சார்ந்துன்னை நின்றேன் சரண்

ஞாலமெலாம் உன்புகழை நாட்டக் கவிபுனைந்தேன்
காலமெலாம் உன்னைக் கருதிடுவேன் - வேலவனின்
அண்ணாவுன் னன்பர்களை ஆதரிக்கும் மெய்ஞ்ஞானக்
கண்ணா எனைக்கண்ணாற் காண்

சக்திக் கணபதியே சாதுக்க ளைக்காக்கும்
சுத்த சிவஞானச் சோதியே - பக்தியுடன்
என்னையுனக் கீந்தேன் இறைவா குருபரனே
உன்னையெனக் கீவாய் உவந்து

கணபதிழும் என்று கருத்துருகி நின்றேன்
குணபதியே தேனருவிக் குன்றே - கணமதனில்
தூயநல் லார்க்குத் துணைசெய்வாய் உள்ளத்தே
கோயிலிருந் தென்பூசை கொள்

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்



# ஆனைமுகனும் அறுகம் புல் வழிபாடும்

இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் செம்பொன் மணி நிலத்தில், மாரி தவழுங் காலங்களில் மரகதப் பச்சை விரிப்பாக அறுகம்புல் படர்ந்து வளர்ந்து பரவிச் செழித்திருக்கும். அறுகம் புல்லின் மகிமை புராணங்களிலே சிறப்பாக விநாயக புராணத்திலே விதந்து உரைக்கப பட்டுள்ளமைய்யை யாவரும் அறிவர்.

கலாநிதி சுபா ஜெயராசா
யாழ் பல்கலைக் கழகம்

பார்க்கவ புராணத்திலே ஆனைமுகக் கடவுளுடைய பெருமை மிகவும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. பார்க்கவ புராணம் பிருகு முனிவரால் வழங்கப்பெற்றது. பிருகு முனிவர், இப்புராணம் யாவர்க்கும் பயன்பட வேண்டும் என்னும் இலட்சியத்தோடு உபாசனா காண்டம், லீலா காண்டம் என்னும் இரண்டு காண்டங்களாக அமைத்து, அவற்றை இருநூற்றைம்பது பிரிவுகளாக்கிப் பன்னிரண்டாயிரஞ் சுலோகங்களால் ஒரு புராணமாக்கினார்.

முதலாவது உபாசனா காண்டத்தில் அறுகம் புல்லின் பெருமை விதந்து உரைக்கப்பட்டுள்ளது. நறுமணமுடைய பலவகையான மலர்கள் இருக்கவும், அறுகினால் நான்முகனை ஏன் வழிபடவேண்டும் என்பதை விளக்க, அவந்தி பட்டணத்திலுள்ள சுபலன் என்னும் பெயருடைய ஓர் அரசனுடைய கதை கூறப்படுகிறது. சுபலனுடைய மனைவியின் பெயர் சுபத்திரை. அவர்களைத் தேடிவந்த அந்தணனுடைய பெயர் மதுசூதன். அம்மூவரையும் அடியொற்றி அவர்கள் இயற்றிய செயல்களால் அறுகின் பெருமை உரைக்கப்படுகின்றது.

மேலும், அனலாசுரனை அழித்த ஆனைமுகக் கடவுளின் வெப்பம் தண்ணெனக் குளிரும் வண்ணம் எண்பதாயிரம் முனிவர்கள் அங்கு வந்து ஒவ்வொருவரும் இருபத்தோரறுகுகளை முடிமுதல் அடிவரை சொரிந்தார்கள் என்பதும் விநாயக புராணத்திலே எடுத்துரைக்கப் பெறுகின்றது.

சனக மன்னனுடைய பசு அறிவைப் போக்கிப் பதியறிவைக் கொடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சியிலும் அறுகின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. 'ஒரு புல்லுக்கு நிகராகுமா குபேரனுடைய செல்வம்;' என்று கூறுமளவுக்கு அறுகின்

பரராஜ சேகரனே

துஞ்சிடவே கண்ணிரண்டும் துயர்மிக்குப்
படுகுழியில் வீழ்ந்தபோது
துஞ்சிடுமோ? என்செயுமோ? யானறியேன்
வஞ்சமற்ற மனத்துறைவோய்
தஞ்சமென் றுனைநாடி நின்றேன்
தருணமிதே தற்பரனே
பஞ்சமா பாதகந்தீர்த் தருள் தாராய்
பரராஜ சேகரனே!

சுசீலா தர்மலிங்கம் (இணுவில்)

நிறைகோல் ஏறிய வரலாறு உண்டு. "ஆனைமுகக் கடவுளினுடைய திருவடிகளிலே சேர்க்கும் அறுகுக்கு இந்திரன் முதலான வர்களுடைய செல்வமும் ஒப்பாகாது" என்பது விநாயக புராணம் விளக்கும் உண்மை.

புராணங்கள் சாதாரண மக்களுக்கு நல்லறிவூட்டும் அறிவுக்கருவூலங்கள் என்று கொள்ளப்படும் பொழுது, புராணங்களின் இலக்கியப் பண்பில் உட்பொதிந்து காணப்படும் படிமவாக்கங்களும், குறியீட்டுப் பண்புகளும் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. அறுகு என்பது சாதாரணமாகத் தரையிலே படரும் ஒரு புல் என்ற எளிமை ததும்பிய படிமவாக்கம் வாமனாவதாரம் போன்ற செயல் வீச்சுடன் இணையும் வண்ணம் அமைக்கப் பெற்றிருத்தல், குறிப்பிடத்தக்கது.

சிறியன என்று கருதப்படுபவை விந்தை மிகு அணுவின் அடக்கமாய் ஆற்றலாய் ஒளிர்விடும் புனைவிலே சாமானியர்களின் பெருமை உணர்த்தப்படுதல் நினைவுக்குரியது.

## இணுவைக் குஞ்சரத்தான்


சைவ மணங்கமழ செந்தமிழ்ச்சொற்
பாவளமும்
பெருவளம் போற்பரந்து பசுமையுற-
இவ்விணுவை
நற்குஞ் சரத்தானை நாடோறும்
நற்றமிழால்
பொற்பூசை செய்வோம் பொருந்தி

ஓங்கார வடிவே உண்மைமிகு
நற்பொருளே
நீங்கா அருளுடையாய் நாளும்-
ஓங்குபுகழ்
நல்லிணுவை மானகர்வாய் நீயிருந்து
விளையாட
வல்வினையும் போமே எமக்கு

பக்தி தருவாய் பரந்த அருள் தருவாய்
சித்தி தருவாய் சீர் தருவாய் -
முத்தியிலும்
மூவா முழுமுதலே அன்புருவாய்
மூவுலகும்
ஏவாய் பணிபுரிய நின்று

ஆனை முகனே ஐங்கரனே ஆசையுடன்
ஊனே ஒடுங்க உள்ளுவப்ப -
நினைந்துவழி
உருகி நின்றோம் நின் புதுமலர்த்தாள்
விரைந் தருள்வாய் இனி

இணுவைக் குமரன்






பிரம்மஸ்ரீ
வேதாகமமாமணி
சோ.இரவிச்சந்திரக்குருக்கள்

நமது உள்ளங்காலிலிருந்து தலையுச்சிவரை அநேகம் நரம்புக் கற்றைகள் உள்ளன. நாம் சுறு சுறுப்பாக அடிக்கடி உட்கார்ந்து எழுந்திருந்தால் (தோப்புக் கரணத்தால்) அந்த நரம்புக் கற்றைகள் சுருங்கிச் சோர்வடையாமல், இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்கு பலம் கொடுக்கும். அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால், மனதில் சாந்தமான நினைவுகள் மலரும்.

நாம் தோப்புக்கரணம் போடும்போது உடல் அசைவில் சுஷீம்னா என்ற நாடி தட்டி எழுப்பப்படுகிறது. இருகரங்களில் நெற்றிப் பொட்டுக்களில் குட்டிக் கொள்ளும் போது ஸஹஸ்ராரம் என்ற இடத்திலிருந்து யோகிகளுக்கு அமிர்தம் சிந்தும். விநாயக உபாஸனையின் மூலம் சுஷீம்னா நாடி, அமிர்தகலசம் இரண்டும் ஒருங்கே இயங்குவதால் பூரண பலன்களை அடைய முடிகிறது என்பர்.

எந்த தேவதையை வணங்கத் தொடங்கினாலும், முதல் விநாயகரை தியானித்து சுக்லாம் பரதரம் என்ற ஸ்துதியை கூறி நெற்றியில் குட்டிக் கொண்ட பின்னரே வணங்க வேண்டும். இவ்வாறு குட்டிக் கொள்வதால் ப்ரம்ம ரந்த்ரத்தில் அமிர்தம் பெருகி நாடிகளில் பாய்ந்து உபாசகர்களுக்கு சோம்பல் முதலிய அவகுணங்களை விரட்டி நல்ல மனநிலையை அளிக்கிறது.

மூலக்கனல் என்று சொல்லப்படுவதே சுஷீம்னா நாடி. இது மனித சரீரத்தில் அடி வயிற்றின் கீழ் ஓங்கார ரூபத்தில் அமைந்து செயலாற்றுகிறது. இதைத் தட்டிச் செயல்படுத்தி மேல் நோக்கி ஸஹஸ்ரார மண்டலம் வரை செலுத்தி சிரஸிலிருக்கும் அமிர்தத்துடன் கலந்து அவ்விடமே அதை நிலை நிறுத்திக் கொண்டால் மனிதன் தன் நிலை மறந்து ப்ரும்மத்துடன் ஐக்கியப்பட்டு நிற்பான். பேரானந்தத்தைக் காண்பான். இந்த நாடியைச் செயற்படுத்துவதற்கு - தட்டி எழுப்புவதற்கு மூலாதாரத்தில் அளவில்லாத உஷ்ணத்தை உண்டு பண்ண வேண்டும் இதற்கு மனத்தை ஒரே நிலையில் ஐக்கியப்படுத்தி, நெடுங்காலம் ஜபதபங்கள் புரிய வேண்டும். அதிக உஷ்ணமான பொருட்களை உபயோகித்து பூஜை முதலியன புரிதல் மறைமுகமாக யோகத்தீ மூட்டு என்று உணர்த்தவே யாகும்.

மூலாதாரத்திலுள்ள சுஷம்னா நாடி கணபதி என்பதாலே நமது ரிஷிகள், சாஸ்திர விற்பன்னர்கள் ஆகியோர் தாவர வர்க்கத்திலேயே மிகமிக உஷ்ணமான அறுகம்புல், வெள்ளெருக்கு, வன்னி பத்ரம் ஆகியவை கணபதி பூசைக்கு உகந்தவை எனக் கூறியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போடுவதையும் விநாயக வழிபாட்டு மரபாக அமைத்துள்ளார்கள்.

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் வரலாறு

இயற்கை அழகினாலும், கல்விச் செல்வத்தாலும் ஆன்றமைந்தடங்கிய சான்றோர்கட்கு உறைவிடமாய் விளங்கிய தன்மையாலும யாழ்ப்பாணத்து நல்லூரே சிறந்த இடமெனக்கருதிஅரண்மனையமைத்து அந்நல்லூரையே இராஜதானியாகக்கொண்டு இந்நாட்டை நீதிதவறாது ஆட்சி செய்து வந்த தமிழ் மன்னன் பரராஜசேகரன் என்பது சரித்திர வரலாறு. சைவத்தையும் செந்தமிழையும்நன்கு வளர்த்த பெருந்தகையாளன். தமிழ்ச்சங்கம் தாபித்து அதன் வாயிலாகப் பலநூல்கள்வெளிவரச் செய்த உபகார சீலன்.

அத்தகையமன்னன்பேராயிரமுடையான் என்னும் திருக்கோவலூர் வேளாண்பிரபு குடியிருக்கப் பெற்றதும் சான்றோர் புகழும் ஆன்றோர்கட்கு உறைவிடமாயதும் சைவ வேளாண் மக்கள் வசிக்கப்பெற்றதுமாய இணுவில் என்னும் அணிபெறுநாடே உகந்தஸ்தானம் எனக்கருதி கொன்றையும் கூவிளையும் நிம்பமும்
மதூகமும் மருதும் அரசும் தேமாவும் தீம்பலாவும் தண்ணிய சூழலில் தப்பமிக்க புட்பங்களின் ஒப்பத்தினாலும் பாதபங்களின் மேதகவினாலும் வசீகரிக்கப்பட்டவனாய்ப் பிரணவ சொருபியாகிய ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு அங்கு ஆலயம் எழுப்பி, அப்பெருமானைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தான்.

அம்மன்னன் தாபித்த காரணத்தால், ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் என்பது அன்றுதொட்டு இன்று வரை வழங்கும் திருநாமமாகும். பரராஜசேகரமன்னன் ஆரியச்சக்கரவர்த்திகள் மரபில் பதினோராந் தலைமுறையைச் சேர்ந்தவனாவான். இது "சிங்கையாரியச் சக்கரவர்த்தி தன் மரபில் ஏகாதச சிரமுறையினான்" என்ற பழைய செய்யுளால் விளங்கக் கிடக்கிறது.

*மூதறிஞர்*
*வை.கதிர்காமநாதன்*
*(முன்னாள் அதிபர்)*

இவ்வாலயம், போர்த்துக்கேயர் ஆட்சி புரிந்த காலத்தில், தகர்த்தப்பட்டுக் கீலமுற்றுக் கிடந்தது. இவ்வாறு பல வருடங்கள் கழிய இவ் வன்செயல் காரணமாக வேதனையுற்ற இவ்வூர் மக்கள் செய்வதறியாது திகைத்தனர்.அக்காலத்தில், சைவசித்தாந்த சிரோமணியாய் சிவபூஜா துரந்தராய் விளங்கி சிவஞான சித்தியார்க்கு உரை எழுதிய பாரத்துவாஜ கோத்திர வேதாகம விற்பன்னர் ப்ரம்ம ஸ்ரீ க.நடராஜக் குருக்களும், தணிகைப் புராண உரையாசிரியராய் விளங்கிய மஹாவித்துவான் பொ. அம்பிகைபாக உபாத்தியாரும் ஊரவர்களுடன் கலந்தாலோசித்து, இடிபட்ட ஆலயத்தை ஊரவர்களைத் துணையாகக் கொண்டே பொருளுதவி பெற்றும் பிடியரிசி எடுத்தும் கட்டுவித்து முடிப்பாராயினர். வேளாண்குல திலகராகிய ஸ்ரீ மயிலர் ஆறுமுகம் தலைமையில் ஆன திருப்பணி சிறப்புறுவதாயிற்று.

ஆலயம், நித்திய நைமித்தியங்களினாலும் புராண படனங்களினாலும் சிறந்துவிளங்கு வதாயிற்று. இவ்வூர்ப்பெருமக்கள் விரதானுஷ்டான சீலராய்விநாயகப் பெருமானை வழிபட்டு வாழ்வாங்கு வாழ்ந்து

வரலாயினர்.விநாயகசஷ்டி விரதம் இவ்வாலயத்தில் எல்லோராலும் அனுஷ்டிக்கப் பட்டு வருகிறது. இ.்.திவ்வாறாக, அரசன் காலத்தில் இருந்த ஆலய அமைப்பைக் காண்பது எக்காலம் என அடியேன் கவலையுற்றிருந்த காலத்தில், 'பெரியபுராணத்தைப் படனஞ் செய் கவலை நீங்கும;' என்று ஒருவர் கனவில் சொல்ல, நனவில் அது உணர்ந்து அவ்வருடமே அந்நூலைக் காப்புக்கட்டிப் படித்து வரலானேன். இன்றும் அந்நூல் படிக்கப் பெற்றுப் பொருள் கூறப்பட்டு வருகின்றது. மணிக்கூட்டுக் கோபுரம் ஸ்ரீ சுப்பிரமணியர் துரைராஜா அவர்களால் உன்னதமாக நிறுவப் பெற்றது. அழகிய சித்திர வேலைப்பாடுகள் பொருந்திய ஒப்பற்ற இரதம் ஒன்று ஸ்ரீ விநாயகப் பெருமானுக்குப் பெரும் பொருள் செலவு செய்து ஸ்ரீ தியாகர் நாகமுத்து அவர்களாலும் அவர்கள உறவினர்களாலும்ஆக்கப் பட்டுள்ளது. இன்னும் இவ்வாலயத்துக்கோர் இராஜகோபுரம் இன்றியமையாததெனக் கருதி ஸ்ரீ விநாயகப் பெருமானின் திருவருள் துணைக் கொண்டு அத்திருப்பணிவேலையை ஸ்ரீ சீனிவாசகம் அப்பையாபிள்ளை அவர்கள் புண்ணிய சீலர்களாகிய ஊரவர்கள் கொடுக்கும் பொருளுதவி கொண்டும், செல்வச் சீமானாகிய திரு.சி.சின்னத்துரை அவர்கள் கொடுக்கும் பேருதவி கொண்டும் இன்னும் பிறர் விரும்பி உபகரிக்கும் பொருள் கொண்டும் பூர்த்திசெய்துள்ளார்கள்.தஞ்சாவூர் ஸ்தபதியார்திரு.சி.சிதம்பரம்பிள்ளையவர்களும், காரைக்குடி கறுப்பையா சேர்வையவர்களும் இக்கோபுரத்தை பூர்த்தி செய்த மகா சிற்பிகளாவர். இவ்வரிய சிவப்பணியாம் திருப்பணியைத் தமது இடையறா முயற்சியாலும் இரவு பகலென்று பாராது திருவருட்டுணை கொண்டு நடாத்தி முடித்தார்கள். அவர் திருப்பணி யாண்டும் யாவராலும் பாராட்டற்குரியது.

> ஏரார் இணுவில்வாழ் எந்தை கணபதியின்
> தாரார் திருவடியைத் தாழ்பணிந்தோர் ஆரா
>
> அமிழ்தம்போல் வாழ்வர் அருட்செல்வம் சூழ்வர்
> தமிழுள் ளளவுந் தழைத்து
>
> - கிருபானந்தவாரியார்-

இராஜகோபுர கும்பாபிஷேகம் பரிதாபி வருஷம் ஆவணி மாதம் 19ம் திகதி (4-9-72) இல் சுபமுகூர்த்தத்தில் நடைபெற்றது. ப்ரம்மஸ்ரீ க.நடராஜக்குருக்கள் பரம்பரையில் வந்த அர்ச்சகர்களே கும்பாபிஷேக கிரியைகளை நடாத்தினார்கள். பொய் பல நினைத்து பொய் பல பேசிப் பொய்யினும் பொய்யாய இவ்வுடலை மெய்யெனக் கருதி வாழும் சில் வாழ் நாட்பல்பிணிச் சிற்றறிவினோமாகிய யாம் எல்லோரும் உய்யும் வண்ணம் ஸ்தூல லிங்கமாகிய இராஜகோபுரம் வானுறவோங்கிக் காட்சியளிக்கின்றதே. அக்கோபுரத்தைத் தரிசித்து விநாயகப் பெருமான் பேரருளைப் பெற்று நலம் பல பெறுவோமாக.

"பண்ணிய மேந்துங் கரந்தனக்காக்கிப்
பானிலாமருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கியரதனக் கலசவியன்
கரந்தைந்தை தாய்க்காக்கிக்
கண்ணிலா ணவவெங்கரி பிணித்தடக்கிக்
கரிசினேற் கிருகையுமாக்கு
மண்ணலைத் தணிகைவரை வளராபத்
சகாயனைஅகந் தழீஇக்களிப்பாம;"

சித்திக்குமுத்தி திருவுஞ் செறிந்திடுஞ்
சேருமருள்
சித்திக்கு முத்தமராகச் செயும்சிவன்
முன்னருளும்
சித்திக்கு முத்தநகையார் திருத்தங்கிணு
வையரெண்
சித்திக்கு முத்தர்க்கு முன்னோனிணையடி
சேர்மின்களே

# விநாயகர் தத்துவம்

## பாபாவின் விளக்கம்

கணேசரின் யானைத் தலையின் தத்துவம் யாதெனில் யானை சிறந்த அறிவு படைத்தது. யானைக்கு மோதா சக்தி" அதிகம். மேலும் யானையின் காதுகள் பெரியதாக இருப்பதால் நுண்ணிய சத்தத்தைக் கூட அதனால் கிரகிக்க முடிகிறது. இறைவன் புகழைக் கேட்பது என்கிற ஆன்மீக சாதனையின் முதற் படிக்கு காதுகள் கூர்மையாய் இருப்பது அவசியம். யானை புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒரே மாதிரி எடுத்துக் கொள்கின்றது. தேவையற்றவையை உதறி விடுகிறது. நல்ல விஷயங்களை மௌனமாக ஏற்றுக் கொள்கிறது. இவ்வாறு மனித குலத்திற்கு அத்தியாவசியமான பாடங்களை விநாயகர் நமக்கு கற்றுத் தருகிறார்.

வாகனம் மூஞ்சுறு தத்துவம்.

அவரது வாகனம் மூஞ்சுறு. மூஞ்சுறு இருளில் தான் சஞ்சரிக்கும். அத்துடன் மூஷிகத்திற்கு வாசனை பிடிக்கும் வாசனை பிடித்துக்கொண்டே எந்தெந்த உணவுப் பொருள் எங்கிருக்கிறது எனக் கண்டு கொள்ளும். ஆன்மீகத்தில் இருள் என்பது அஞ்ஞானத்தையும் வாசனை என்பது ஆசைகளையும், குறிக்கிறது எனவே தான் அஞ்ஞானத்தையும், ஆசைகளையும் கட்டுப்பாட்டில் வைப்பவர் என்பதை விளக்கவே அவற்றின் உருவமாக விளக்கும் மூஷிகத்தை வாகனமாகக் கொண்டு உள்ளார்.

விநாயகர் சதுர்த்தியிலே விசேடமான உணவுப்பண்டங்கள்கடவுளுக்கு நிவேதனமாக அளிக்கப்படுகின்றன. அப்பண்டங்கள் நீராவியில் தயாரித்தவை அல்லது எள் அறுவடையாகும். எள்ளானது சுவாச சம்பந்தமான நோய்களையும் கண்நோய்களையும் தீர்க்க வல்லது. நீராவியில் வெந்த பண்டங்கள் சுலபமாக சீரணிக்க கூடியவை ஆகும். இவ்வாறு முன்னோர்கள் ஆரோக்கியமும் ஆனந்தமும் கூடியவகையில் இறைவனை வழிபட்டார்கள்.

விநாயகர் பூஜைக்கு

விநாயகர் பூஜைக்கு அறுகம்புல் பயன்படுத்தப்படுகிறது. அதற்குரிய காரணத்தை விளக்க புராணங்களிலே ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. ஒரு முறை சிவபெருமானும் பார்வதியும் கைலாயத்தில் தாயம் ஆடிக்கொண்டிருந்தார்கள். இதில் யார் வென்றது எனத்தீர்ப்புக் கூறும் பொறுப்பு நந்தியுடையதாக ஒப்படைக்கப் பட்டிருந்தது நந்திக்கு ஈஸ்வரன் மீது அபிமானம் அதிகம் அதனால் தோற்ற போதுகூட ஈஸ்வரனே வென்றதாக அறிவித்தார். பார்வதி கோபத்தால் நந்தியை சபித்தார்.நந்திபார்வதியின் பாதம் பணிந்து பாவ விமோசனம் கோர,பார்வதி மனமிரங்கி, ஆவணிச் சதுர்த்தியில் என் மகன் கணபதியின் பிறந்த தினத்தில் உனக்குப் பிரியமான அறுகம் புல்லினால் அர்ச்சனை செய்தால் உன் சாபம் நீங்கும;" என அருளினார்.


இதிலிருந்து யாருக்கு எது பிடிக்குமோ அதை இறைவனுக்குப் படைத்தால் பாவம் விலகும்என்பதுதெளிவாகச் சொல்லப்படுகிறது. இந்தச் சத்தியத்தைஸ்தாபிப்பது தான் விநாயக தத்ததுவம் .


உயிர் வாழ்க்கைக்கே தலைவர் விநாயகர்.சுயநலம், சுயலாப நோக்கம் இவற்றை வைத்துக் கொண்டு வாழக்கூடாது என்று உணர்த்துபவர். சுயநலத்தை தியாகம்செய்ய வேண்டும். பிறர் நலன் நாடி ஆன்மீக வாழ்க்கை நடத்த வேண்டும் அதன் மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் இதுவே நிஜமான விநாயக தத்துவம்.

- நன்றி இறைதூதன் -

# பாபா பதிக்கும் சுவடுகள்

காருண்ய சீலா! தீனதயாளா!
புட்டபத்தி வாசா! சாயி ஈசா!





சத்திய சாயி ஈசன் பதிக்கும் சுவடுகள் கண்டு, கேட்டு, உணர்ந்து மெய்விதிர் விதிர்த்துக் கண்ணீர் மல்கி நெஞ்சம் குழைகிறது.

வே.வரதசுந்தரம்

இவ்விதழின் அட்டைப்படத்தில் விநாயகப் பெருமானும் பகவான் பாபாவும் அருட் பொலிவுடன் தோன்றுகிறார்கள். விநாயகர் சிலையில் குங்குமம், மஞ்சள் பரந்து காணப்படுகின்றது. சாயி பக்தையான ஒரு ஜப்பானிய பெண் வழிபட்ட விநாயகரை இது நினைவூட்டுகிறது.

அந்த அற்புதம் இதோ!

ஒரு பாடசாலை தலைமை ஆசிரியையாக இருக்கும் இவரும் அறுவைச் சிகிச்சை நிபுணருமான அவரது கணவரும் சாயி பக்தர்கள். இந்தப் பெண்மணி ஜப்பானில் உள்ள பிரபல கடைத் தொகுதிக்குச் சென்றிருந்த வேளை புராதன சிலைகள் உள்ள கடையொன்றினுள் நுழைந்தார். அங்கே பல சிலைகளின் மத்தியில் ஒரு விநாயகர் சிலை காணப்பட்டது. இச்சிலை அவரது உள்ளத்தை ஈர்த்தது இருப்பினும் அதனை வாங்காமல் வீடு செல்வதற்கும் லிவ்ற் மூலம் கீழே சென்றார். ஆனால் அச்சிலை மீண்டும் மீண்டும் மனதில் தோன்ற அவர் லிவ்ற் மூலம் 8வது மாடிக்குச் சென்றார் பிள்ளையார் விக்கிரகத்தை திரும்ப, திரும்ப பார்த்தார் அதை வாங்குவதா இல்லையா என்பதே அவர் யோசனை.

உமக்கு இந்த சிலை பிடித்திருக்கிறது "நாங்கள் பெரிய கழிவு தருவோம் நீங்கள் தயவு செய்து இதனை எடுத்துச் செல்லுங்கள்" என்று கடை உரிமையாளர் கூறினார். ஆனால் இந்த ஜப்பானிய பெண்மணி இது பற்றி கலவரமடைந்து காணப்பட்டார் இந்தச் சிலையை இதுவரை வழிபட்டவர் எதற்காக விற்றார் இந்த சிலையை வழிபட்டதால் அவருக்கு ஏதேனும் சஞ்சலம் துயரம் ஏற்பட்டனவா அதன் காரணமாக இந்தச் சிலையை அவர் கைவிட்டாரா இப்படி எல்லாம் அப்பெண்மணியின் மனத்தில் யோசனை தோன்ற அதை அவர் கடைக்காரருக்கும் சொன்னார். "நீங்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது நீங்கள் வழிபடப் போகும் சிலை அல்லவா எனவே இதனை எடுத்துச் செல்லுங்கள்

அதன் பயனாக வாழ்க்கையில் அசௌகரியம் ஏற்பட்டால் நீங்கள் திருப்பித் தாருங்கள் என்றார்" கடை உரிமையாளர்.

இந்த உத்தரவாதம் இப்பெண்மணிக்கு உற்சாகத்தை கொடுத்தது. இப்பிள்ளையார் சிலையை நேரடியாக எடுத்துச் செல்லவில்லை. வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்குப் பதிலாக டோக்கியோவிலுள்ள சாயி சமித்திற்கு கொண்டு சென்று வழிபாட்டறையில் அதை வைத்தார் இரண்டு மாதங்களாக பஜனை மூலம் தீபாராதனை மூலம் அச்சிலையை புனிதப்படுத்திய பின் ஒரு நாள் அகண்ட நாம பஜனை முடிவுற்றதும் தனது வீட்டிற்கு எடுத்துச் சென்று வழிபாட்டறையில் வைத்து வழிபட்டு வந்தார். இது நிகழ்ந்தது 1991ம் ஆண்டு செப்டெம்பர் மாதம்.


ஒருமாதம் கழித்து ஒரு நாள் அவருடைய மகன் வழிபாட்டறையில் இருந்து ஓடி வந்து பிள்ளையாரின் இடது கண் சற்று திறந்திருப்பதாகச் சொன்னார். அங்கு சென்றதும் பிள்ளையாரின் இடது கண்ணிலிருந்து ஒரு ஒளிக் கீற்று வெளி வருவது கண்டு மகிழ்ந்து துள்ளினார். "பிள்ளையாரே இனிமேல் நாம் இருவரும் ஆண்டு தோறும் குரு பூர்ணிமா தினத்தன்று புட்டபர்த்தி செல்வோம் என்று பிள்ளையாரைப் பார்த்து கூறினார்"

1992ம் ஆண்டு ஜுலை மாதம் பிள்ளையாரை எடுத்துக் கொண்டு புட்டபர்த்தி சென்றார்.புட்டபர்த்தி பிரசாந்தி நிலைய வாயிலில் உள்ள விநாயகர் சிலைக்கு அருகில் இதனை சில விநாடிகள் வழிபட்டார். இறுதியில் பகவானிடம் இச்சிலையை கையிலேந்தியவாறு சென்று ஆசிர்வாதம் பெற்றார். நாடு திரும்பியதும் பகவானால் ஆசிர்வதிக்கப்பட்ட விநாயகர் சிலையை தனது வழிபாட்டறையில் இருத்தி நாள் தோறும் பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வந்தார்.

1994ம்ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதி சனிக்கிழமை அன்று வழிபாட்டறையில் விநாயகர் புதுமையாகத் தோன்றினார். உடலெங்கும் குங்குமமும் மஞ்சளும் அரிசியும் பூக்களும் காணப்பட்டன.குங்குமமும் மஞ்சளும் உடலில் பரவியிருக்க கைகளிலே பூவும் அரிசியும் தென்பட்டன.

இது கண்டு மெய் மறந்து போன இந்த ஜப்பானிய பெண்மணி "அது மட்டுமா ஜப்பானியர்களான அவரது மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்"கணேஷா கடவுள் கணேஷா கடவுள்" தான் என்று வியந்தனர்.


சோதிடக் கணிப்பீடுகள்



**VIGNES**
465/1A Havelock Road
Colombo 06 Sri Lanka
Telephone: 074-513233
Foreign callers Dial: 009474 513233

உங்கள் ஜாதகங்களை கணனியில்(computer) துல்லியமான கிரகஸ் புடங்களுடன் கணித்து இராசி, நவாம்ச, பாவ,சப்தவர்க்க, அஷ்டகவர்க்க, கிரகபலம், திசா,புத்தி, அந்தர விபரத்துடன் பெறலாம்.

வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்கள் அந்நாட்டு நேரத்தில் கணிக்கப்படுகின்றன.

உங்கள் ஜாதகங்களிற்குரிய விரிவான வருடப்பலனை எம்மிடம் அறிந்து கொள்ளலாம். computer flopy; diskல் பதிவு செய்தும் ஜாதகங்களைப் பெற முடியும். ஜாதகம் கணிக்க நீங்கள் தர வேண்டிய விபரம்,பெயர், பிறந்த திகதி, நேரம்,பிறந்த இடம் மட்டுமே.

மகோற்சவம் என்பது வருடத்துக்கு ஒருமுறை நமது ஆலயங்களில் நடைபெறும் பெரும் திருவிழாவாகும். இந்த மகோற்சவம் நைமித்திக பூஜையில் அடங்கும். இதனை பிரமோற்சவம் என்றும் கூறுவர். இது இறைவனுடைய ஐந்தொழில்களையும் நினைவூட்டுகின்றன. ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவத்தில் கொடியேற்றம் முதன்மை பெற்று விளங்குவதைக் காணலாம்.




கொடியேற்றம் துவஜா - கொடி, ஆரோகணம் - மேலேு ஏறுதல். எனவே, கொடியேற்றம் என்பது கொடியை மேலே ஏற்றுதல் என்று பொருள் படும் கொடியேற்றம் பஞ்ச கிருத்தியங்களின் ஒன்றான படைப்புத் தொழிலைக் குறிக்கின்றது.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயிலில் நடைபெறும் வருடாந்த மகோற்சவம் வைகாசி மாதத்தில் வரும் புனர்பூச நட்சத்திரத்தில் பதினொராம் திருவிழாவான தீர்த்தோற்சவம் நடைபெற்றதாக சதய நட்சத்திரத்தில் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பித்து தொடர்ந்து ஒன்பது நாட்கள விழாக்கள் சிறப்பாக நடைபெற்று பத்தாம் நாள் இரதோற்சவமும் அதனையடுத்து பதினோராம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இவ்வாலயத்தில் மகோற்சவம் ஆரம்பித்துச் சில தினங்களுக்கு முன்பாகவே விநாயகப் பெருமானின் அடியார்கள் ஆலயத்தையும் வீதிகளையும் சுத்தம் செய்யத் தொடங்கி விடுவார்கள். தோரணங்களினாலும் மாலைகளினாலும் மண்டபங்களை அலங்கரிப்பார்கள். குலையுடன் கூடிய வாழைகளை ஆங்காங்கே நாட்டுவார்கள். அன்றாடம் உழைப்பதும் உண்பதுமாக விருந்த ஊர் மக்களுக்கு மகோற்சவம் நெருங்க நெருங்க ஒரு புதிய உற்சாகம் பிறக்கிறது. இணுவை மாநகரே விழாக்கோலம் பூண்டு நிற்கும். ஆலயத்தின் சுற்றாடல் முழுவதும் தெய்வமணம் கமழும் பக்திப்பாடல்களின் தெய்வீக இசை காற்றில் மிதந்து வந்து அலைந்து திரியும். மனத்தை ஸ்ரீ பரராஜசேகரப் பெருமானது பாதார விந்தங்களில் பதிய வைக்கும். அடியார்கள் அனைவரும் இந்த மகோற்சவ காலத்தில் தூய உடையும் உள்ளமும் கொண்டவராய் வரிசை வரிசையாக கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வதைத் தினமும் காணலாம்.

துவஜாரோகணம் என்னும் கொடியேற்றத் திருவிழா, இவ்வாலயத்தில் மிகவும் சிறப்பாகவும் ஆகம முறைப்படியும் நடைபெறுவது வழக்கம். மகோற்சவத்தை எவ்வித இடையூறுமின்றிச் செவ்வனே நடத்தி முடிப்பதற்கு ஆன்மாவானது மலநீக்கம் பெறுதற் பொருட்டு, திருவருளாகிய கொடியை ஏற்றுவதையே கொடியேற்றம் என்று கூறுகின்றோம்.




"சிவநெறிச் செம்மல்"
வை.அநவரதவிநாயகமூர்த்தி

கொடியேற்றத்துக்கு முதல்நாள் அநுக்ஞை, கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம் ஆகிய கிரியைகள் நடைபெறும். இவைகளினால் நாட்டுக்கும் மக்களுக்கும் பலவித நன்மைகள் ஏற்படுகின்றன. இந்தக் கிரியைகள் பற்றிச் சைவ மக்களாகிய நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். எனவே, இவற்றை சிறிது விளக்கிக் கூறுவோம்.

அனுக்ஞை என்றால் உத்தரவு பெறுதல் என்பது பொருள். மகோற்சவத்தை எவ்வித இடையூறுமின்றிச் செவ்வனே நடத்தி முடிப்பதற்கு முழுமுதற் பொருளாக விளங்கும் விநாயகப் பெருமானைப் பூசித்து அவர் ஆசியும் அனுமதியும் பெற்று, பின்னர் சிவாசாரியார்கள் அந்தணோத்தமர்கள் என்போரதும் மூலமூர்த்தி முதலாகச் சண்டேசுவரர் இறுதியாகவுள்ள எல்லாத் தெய்வங்களுடையவும் ஆசியையும் அனுமதியையும் பெறுதல்.

கும்பாபிஷேகம், மகோற்சவம் ஆகிய விழாக்களில் நடைபெறும் கிரியைகளுள் கிராம சாந்தி முக்கிய இடத்தைப் பெறுகிறது. இது ஆலயம் அமைந்திருக்கும் கிராமத்து மக்களது நன்மையின் பொருட்டுச் செய்யப்படும் கிரியையாகும். இது ஆலயத்துக்குக் காவலாளியாக விளங்கும் வைரவ மூர்த்தியின் மூலமாக அவரது ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஏனைய அசுர இராட்சத தேவதைகளினால் வரும் கேடுகளைத் தவிர்ப்பதற்குச் செய்யப்படும். இது பெரும்பாலும் ஆலயத்தின் மேற்குப் புறத்தில் நிகழ்வதாகும். வட கிழக்கில் அல்லது கிழக்குத் திக்கிலும் செய்யப்படலாம்.

வாஸ்து சாந்தி என்பது கிரியை, மந்திரம், விதி முதலியன யாவும் சுத்தி பெறுவதற்கு வாஸ்து புருடனுக்குச் சாந்தி செய்து அதன் பின்னர் தருப்பை, வைக்கோல் ஆகியவற்றோடு பலாசு, அரசு, அத்தி



முதலிய மரங்களின் சருகுகளையும் சேர்த்துப் புருட வடிவமாகச் செய்து அதனைக் கொழுத்திய பின்னர் மண்டபங்கள், உள்வீதி வெளிவீதி எங்கும் இழுத்தும் சுத்திகரித்தல்.

மிருத் சங்கிரகணம் என்பது புற்று மண் எடுத்தலைக் குறிக்கும். கோயில் வளவிலோ, புண்ணிய தீர்த்தக் கரையிலோ, நந்தவனத்திலோ அல்லது வில்வ மரத்தடியிலோ முறைப்படி சுத்தமான புற்று மண் எடுத்து வந்து உலகிலே தானிய விருத்திக்கு முளையிடுவதற்காகப் பயன்படுத்தல்.

அங்குரார்ப்பணம் என்பது (அங்குர-அர்ப்பணம்) முளை இடுதல் எனப் பொருள்படும். அதாவது ஏற்கனவே எடுத்த மண்ணைப் பாலிகை என்னும் மண் சட்டியில் வைத்து நவதானியங்களை பாலிற் கலந்து தூவி முளைக்கச் செய்தல்.

கொடியேற்ற விழாவன்று காலையில் மூல மூர்த்திக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து

சிவாசாரியார் தமக்கும் யாகத்தில் பங்குபற்றும் ஏனைய சிவாசாரியார்கட்கும் காப்புக் கட்டுவதுடன் மூலமூர்த்திக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அவரவருக்குரிய தானத்திலும் இரட்சா பந்தனம்(காப்புக்

கட்டுதல்) என்னும் கிரியையைச் செய்வார். இதனுடைய நோக்கம் கொடியேற்றித் திருவிழா முடியும் வரை வெளியுலக உபாதைகள் ஒன்றும் இவர்களைத் தீண்டா என்பதாகும் பாவங்கள் எல்லாம் நாசமாதற் பொருட்டு கட்டுதல் என்பதே இதன் பொருள். இதனால் கிரியைகள் யாவும் சித்தியாகும்.

கொடியேற்ற விழாவில் கொடிமரம முக்கிய இடத்தைப் பெறுகிறது. இந்தக் கொடிமரம் சிவத்தின் வடிவாகவே அமைந்திருக்கிறது. ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களாகிய பாசத்தை அறுத்து பசுவாகிய உயிர் அருட் சக்தியின் துணையுடன் பதியாகிய சிவத்தைச் சார்ந்து பேரின்பத்தில் திளைத்திருப்பதையே கொடிமரம் காட்டுகின்றது. கொடி உயிரைக் குறிக்கும். கொடிச் சீலையில் வரையப்பட்டுள்ள வாகனம்(மூஷிகம்) விநாயகருக்குரிய வாகனமாக இருப்பதோடு பசுவாகிய உயிரையும் குறிக்கும். கொடிச்சீலையைக் கொடிக்கம்பத்தோடு இணைக்கும் மஞ்சள் கயிறு அருட்சக்தியைக் குறிக்கும். இறைவனின் சக்தியாகிய அருளின் துணையோடு தான் உயிர் முக்தியடைய முடியும். எனவே, கொடி மரத்தின் உச்சியை கொடி அடைவதற்கு இந்தக் கொடிக் கயிறே பெரிதும் உதவுவதால் இதனை நாம் இறைவனின் அருட்சக்தியாகவே கருத வேண்டும். தர்ப்பைக் கயிறு பாசத்தைக் குறிக்கும். தர்ப்பைக் கயிற்றோடு சேர்த்துப் பிணைக்கப்பட்ட கொடி தர்ப்பையின் உதவியினால் மேலே ஏறும். கொடிமரத்தின் உச்சியில் கொடி தங்கி விட தர்ப்பைக் கயிறு மட்டும் கீழே வரும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொடி மரத்தின் அமைப்பைப் பற்றி சிறிது விளக்கிக் கூறுவோம். கொடிமரம் மூலமூர்த்திக்கு நேராக கர்ப்பக் கிரக விமான உயரத்தின் அளவுக்கு அமைந்திருக்க வேண்டும், என்பது மரபு. கருங்காலி, தேக்கு, முள்எருக்கு, தேவதாரு, மூங்கில், தென்னை ஆகிய மரங்களைக் கொடிமரம் செய்விப்பதற்கு பாவிக்கலாம். நிலத்துக்கு மேல் கொடிமரம் எவ்வளவு உயரம் இருக்குமோ அந்த அளவில் ஐந்தில் ஒரு பங்கு நிலத்திற்குள் புதைக்கப்பட வேண்டும். கொடிமரத்தில் காணப்படும் முப்பத்திரண்டு கணுக்கள் மனித உடலின் முதுகுத் தண்டில் இணைந்துள்ள 33 எலும்பு மூட்டினைக் குறிக்கும். கொடி மரத்தின் உச்சிப் பாகத்தில் உள்ள மூன்று தட்டுக்களில் சிறிய மணிகள் தொங்கிய வண்ணம் அழகுடன் விளங்கும். கொடி மரத்தின் அடிப் பகுதி சதுரமான வடிவிலும் மேற்பகுதி எண்கோண வடிவிலும் அதனிலும் மேற்பகுதி தண்டு போலவும் இருக்கும்.

சதுரமான வடிவில் உள்ள பாகம் பிரம்மனையும் எண்கோணப் பகுதி விஷ்ணுவையும், தண்டுப் பகுதி உருத்திரனையும் குறிக்கும். இவை, படைத்தல்,காத்தல்,அழித்தல் என்று சொல்லப்படுகின்ற முத்தொழில்களையும் குறிப்பிடுவன.

கொடியேற்றத்துக்கு ஆதாரமாக அமைந்த கொடி மரம் கர்ப்பக்கிரகத்துக்கு எதிரே நந்திக்கும் பலிபீடத்துக்கும் பின்புறமாக ஆலயத்தின் நடுவே ஓங்கி உயர்ந்து விளங்குவதைக் காணலாம். கொடி மரத்தை துவஜ ஸ்தம்பம் என்றும் கூறுவர். கொடிச்சீலை என்பது நீண்டதொரு தூய வெண்துகிலாகும். இதில் மூஷிக வாகனத்தில் சூலாயுதத்தையும் கும்பம்,சங்கு, தீபம், அஸ்திரம், பேரி, சூரியன், சந்திரன், மணி, திருவாசி, குடை, கண்ணாடி, சாமரைகள், முதலியவற்றின் படங்களை வரைந்து பூசித்தல். திருவிழாவுக்கு இன்றியமையாதனவாகிய கொடிமரம், கொடிச்சீலை, அஸ்திரதேவர், பலிபீடம் ஆகிய நாலுக்கும் பிரதிட்டைக்காகக் கும்பபூசை செய்தல், கும்பபூசை முடிந்த பின்னர் வசந்த

மண்டபத்தில் வீற்றிருக்கும் உற்சவ மூர்த்திகளான விநாயகர், அம்பாள், வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர் ஆகியோருக்கு சோடச உபசாரத்துடன் விசேட பூசை நடைபெற்று பஞ்ச புராணம் பாராயணம் செய்யப்படும். பின்னர் குடை, கொடி, ஆலவட்டங்கள் மற்றும் மங்கல வாத்தியங்களுடன் உற்சவமூர்த்திகளை எழுந்தருளச் செய்து கொடி மரத்துக்குத் தென்புறமாக வடக்கு நோக்கி வீற்றிருக்கச் செய்து கொடியேற்றுதல். கொடிச்சீலைக்குப் பூசைகள் நடைபெற்று முடிந்ததும் அதனை மேள வாத்தியங்களுடன் வீதி வலம் வரச் செய்து "சமஸ்த தேவதாவாகனம்" என்னும் கிரியையினை முடித்துக் கொண்டு உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த கொடிக்கவி ஓதப்படும். கொடி மரத்தின் கீழ், "அஸ்திரராஜா" என்ற சூலத்தில் சகல தேவதைகளையும் எழுந்தருளச் செய்வதே "தேவதா ஆவாகனம்" எனப்படும்.

கொடிக் கவி பாடி முடிந்ததும் தீபாராதனை நடைபெறும். பின்னர் மங்கல வாத்தியங்கள் முழங்க சுபமுகூர்த்தத்தில் கொடிச் சீலையைக் கொடி மரத்தில் ஏற்றும் வைபவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து தர்ப்பைப் புல்லினாலும், பட்டு வஸ்திரத்தினாலும் கொடி மரத்தின் அடியை அலங்கரித்து அபிஷேக ஆராதனை பலி முதலிய கிரியைகள் நடைபெறும். ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் வெளிவீதியின் எட்டுத் திக்குகளிலும் அட்ட திக்குப் பாலகரை தியானித்து ஒவ்வொன்றுக்கும் உரிய வேதமந்திரம், இராகம்,பண். தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் பூசையும் பலியும் நடாத்தப்படும். அஸ்திர தேவர் தினமும் இருவேளைகளிலும் வெளிவீதி வலம் வந்து பலியிடல் நிகழ்ச்சி நடைபெறும். கொடியேற்ற விழாவன்று விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் முதலிய உற்சவ மூர்த்தங்களுக்கு விசேட பூசைகள் நடைபெற்று மங்கல வாத்தியங்களுடன் வீதிவலம் வரும் திருவுலாக் காட்சியும் நடைபெறும்.

பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான படைப்புத் தொழிலைக் கொடியேற்றம் குறிக்கிறது. அதனைத் தொடர்ந்து வரும் விழாக்கள் காத்தல் அழித்தல் மறைத்தல் ;அருளல் என்பனவற்றைக் குறிக்கின்றன. தேர்த்திருவிழா சங்காரத்தை அதாவது அழித்தலைக் குறிக்கின்றது. தீர்த்தத் திருவிழா அருளலைக் குறிக்கும். இவ்வாறாக ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்கள் இறைவனின் ஐந்தொழில்களையும் நமக்கு நினைவூட்டுகின்றன.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு நிறைந்திருக்கின்ற பரம் பொருள் தயிரில் வெண்ணெய் போல ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார். ஆதியும் அந்தமும் இல்லாத அந்த இறைவனை, உற்சவ காலங்களில் கொடி மரத்திலும், உற்சவ மூர்த்திகளிலும், கும்பத்திலும் எழுந்தருளச் செய்வதற்கு யாகங்கள் பூசைகள் நடைபெறும். இந்த மூன்று இடங்களையும் ஸ்தம்பம், விம்பம், கும்பம் எனக் கூறுவதுமுண்டு. எனவே தான் ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் கொடிமரப்பூசை, வசந்த மண்டபப் பூசை, யாகசாலைப் பூசை என்பன மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன.

தொன்மையும் பெருமையும் வாய்ந்த பரராசசேகரப் பிள்ளையார் ஆலய கொடியேற்ற விழா சீருடனும் சிறப்புடனும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நன்னாளில் விக்கினங்களைப் போக்கும் அந்தப் பெருமானின் பாத கமலங்களைப் பணிந்து துதிப்போமாக.



# மாணிக்கக் மண்ணாரங் கட்டியும்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகத்தில் பக்திச் சுவையையும் பரவச நிலையையும் வெளிப்படுத்தும் ஒரு சிறப்பான பகுதி கோயிற்றிருப்பதிகம். அவர் தில்லையில் தங்கியிருந்த பொழுது, திருப்பெருந்துறையில் உறையும், சிவபிரானின் தனிப்பெரும் கருணையை நினைந்து உருகிப் பித்தரானார். உடல் தில்லையிலும், உள்ளம் திருப்பெரும்துறையிலுமாக ஊசலாடி, அலையுண்ட நிலையில் பக்தியின் வசப்பட்டு அனலிடைப்பட்ட மெழுகுபோல உருகிச் சிவபிரானை விளித்துப் பாடியவை இந்தப் பாடல்கள்.

ஆத்மா சிற்றறிவும், சிறு தொழிலும், சிறிய ஆற்றலும் உடையது. பக்குவமடைந்த ஆன்மாவுக்கு இறைவன் தனது தெய்வ நிலையில் இருந்து இறங்கி, திருவருள் திறத்தை உணர வைத்து, இறுதியில் காட்சி கொடுப்பார். அஃவண்ணமே, மாணிக்கவாசகப் பெருமானுக்கு அருள் புரிந்து, அவரைத் தனதாக்கிக் கொண்டு, தன்னையே அவருக்குக் கொடுத்து விடுகிறார்.

சிவபிரான் திருப்பெருந்துறையின் கண்ணே, அந்தண வடிவம் தாங்கி, குருந்த மர நிழலில் காட்சி கொடுத்து, வாதவூரருக்குத் தீட்சை வழங்கினார். சொல்லும் செயிலும் அற்ற மௌன குருவாகி, சிவபிரானால் வழங்கப்பட்ட நயன தீட்சையினால் வாதவூரர் மலநீக்கம் பெற்றார். (தீட்சை என்பது மலத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுத்தல்.நயன தீட்சை பார்வையால் சீடனை மலநீக்கம் செய்தல்)

மாணிக்க வாசகப் பெருமானை தான் ஆட்கொண்டருளியதால் சிவபிரானுக்கு அணுவளவேனும் பயனோ, இன்பமோ இல்லை. ஆனால் வாதவூரருக்கோ எல்லையில்லாத பேரானந்தம் கிடைத்து விட்டது. ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி ஆடினார். பாடினார், பித்தரானார்.

இறைவனின் திருவருள் திறத்தை வியந்து கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க. என்று வாழ்த்தி அவருடைய பல்வேறு தோற்றங்களையும் வாயார வாழ்க வாழ்க எனப் பலமுறை போற்றிப் பெருமிதம் அடைந்துள்ளார்(கோகழி: திருப்பெருந்துறையிலுள்ள சிவஸ்தலம்.)

அந்தணர் உருவில்வந்தாட் கொண்ட செயலை எண்ணி அந்தணனாவதும் காட்டி வந்து ஆண்ட அமுதே என்று அழைத்துத் துதித்துப் பள்ளி எழுந்தருளும்படி இறைஞ்சினார்.

**அழகு அருணாசலம்**

இவை யாவும் திருப்பெருந்துறையில் நடந்தவை பின்னர் தில்லையில் அவர் தங்கி இருந்த போதும். திரும்பெருந்துறையின்கண் கண்ட ஞான தேசிக திருமேனிக் காட்சியே சிந்தையை நிறைத்து ஆனந்த வெள்ளம் பெருகி நிற்க இறைவனுடன் பேசுகிறார்.

திருப்பெருந்துறையில் உறைகின்ற

இது ஒரு புதுமையான பண்டமாற்று. சங்கரா!நீ ஞானமே வடிவமானவன், இருந்தும், இந்த விஷயத்தில் ஏமாந்து விட்டாய் மதிப்பிட முடியாத மாணிக்கக்கல்லை எனக்குத் தந்து விட்டு, எதற்கும் உதவாத மண்ணாங்கட்டியைப் பெற்றுக் கொண்டனை. ஆதலால் நின்பண்ட மாற்றினால், நம் இருவரில் யார் திறமையுடையவர்?

எம்பெருமானே!சிவபிரானே! இறைவனே!எனது உள்ளத்தையே திருக்கோவிலாக்கி, வீற்றிருந்தது மட்டுமன்றி எனது உடலையும் உனதாக்கி கொண்டாய். இதனால் நான் எல்லையில்லாத பேரின்பம் பெற்றேன்.

உனது அருள் திருமேனியை, எனது உயிரும் உணர்வும் தங்குமிடமாக எனக்குத் தந்தனை. பதிலுக்கு நீ என்னிடம் என்ன பெற்றனை. (ஒன்றும் இல்லை)

நான் என்னை உனக்கு தந்தேன் . நீ என்னுள் புகுந்து உன்னை எனக்குத் தந்தாய்.

இது ஒரு புதுமையான பண்டமாற்று. சங்கரா! நீ ஞானமே வடிவமானவன், இருந்தும், இந்த விஷயத்தில் ஏமாந்து விட்டாய்.

மதிப்பிட முடியாத மாணிக்கக்கல்லை எனக்குத் தந்து விட்டு, எதற்கும் உதவாத மண்ணாங்கட்டியைப் பெற்றுக் கொண்டனை. ஆதலால் நின்பண்ட மாற்றினால், நம் இருவரில் யார் திறமையுடையவர்? சொல்க. இங்ஙனம் காத்திராத வகையில், என்னை மேலோனாக்கிய நின் மடமையின் பொருட்டும் உனக்கு ஒரு கைமாறும் செய்ய வகையறியேன்.

ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி ஆனந்த வெள்ளத்தில் அமிழ்த்தும் அந்தப் பாடல்.

தந்ததுன் தன்னைக் கொண்ட தென்றன்னைச்
சங்கார ஆர்கொலோ சதுரர்
அந்த மொன்றிலா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தனையே கோயிலகொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே.

உடலிடங் கொண்டாய் சங்கரா யார் சதுரர்.– என்று இறைவனைப் பார்க்கிலும் தன்னைச் சமர்த்தர் என்று கூறி இகழ்வது போல நயமாகவே புகழ்ந்து மகிழும் மணிவாசகரின் மதிநுட்பம் மிகவும் உயர்ந்தது.அதை சிவ சிந்தனையுடன் சுவைத்து மகிழும் பேறு பெற்றவர்கள் மிகுந்த பாக்கியசாலிகள்.



கடவுள் அன்பு மயம்! அவரை வெல்ல அன்பு தான் ஒரே வழி! தந்திரங்களால் அவரை அடைய முடியாது! அவர் கட்டளைகளான எல்லோரிடமும் அன்பு செலுத்து! எல்லோருக்கும் சேவை செய்! என்பவற்றை நீங்கள் பின்பற்றும் போது அவரது அருள் பிரவகிக்கின்றது.

பாபா

# ஷீர்டி அற்புதங்கள்

தமது தலையில் ஒரு வெள்ளை டர்பனும், இடுப்பில் சுத்தமான வேஷ்டியும், தமது உடம்பில் ஒரு சட்டையும் அணிவது ஸ்ரீ ஷீரடி பாபாவின் வழக்கம். ஆரம்பத்தில் இதுவே அவரது உடையாகும். அவர் கிராமத்தில் முதலில் வைத்தியம் செய்தார். நோயாளிகளைக் கவனித்து மருந்து கொடுத்தார். அவர் எப்போதும் வெற்றி பெற்று வைத்தியரைப் போன்று புகழ் அடைந்தார்.

பாபாவின் யோக பழக்கங்கள்

பாபா யோகத்தின எல்லாப் பயிற்சிகளையும் முறைகளையும் அறிவார். வாரத்தில் ஒவ்வொரு மூன்றாவது நாளும் பாபா, மசூதியிலிருந்து நெடுந தொலைவிலுள்ள ஆலமரத்துக்கு அருகில் இருக்கும் கிணற்றுக்குச் சென்று தமது வாயைக் கழுவிக் குளிப்பார்.

ஒரு சந்தர்ப்பத்தின் போது, தமது குடல் கும்பி முதலியவற்றை அவர் வாந்தியெடுத்து, அவைகளின் உட்புறத்தையும், வெளிப்புறத்தையும், சுத்தம் செய்து அவற்றைப் பக்கத்திலுள்ள நாவல் மரத்தில் உலர்வதற்காக வைத்துக் கவனிக்கப்பட்டது. இதைப்பார்த்தவர்கள் ஷீர்டியில் உள்ளனர். இவர்கள் இவ்வுண்மையைச் சோதனை செய்து பார்த்துவிட்டனர். 3 அங்குல அகலமும் 22 அடி நீளமும் உள்ள நனைக்கப்பட்ட லினன் துணியால் "தவ்தி" செய்யப்படுகிறது. இது தொண்டைக்குள் விழுங்கப்பட்ட ஏறக்குறைய அரைமணி நேரத்திற்கு வயிற்றுக்குள்ளேயே கிரியைகள் நடத்த வைத்திருக்கப்பட்டு பிறகு, வெளியே எடுக்கப்படுவதே சாதரண "தவ்தி" யாகும். ஆனால் பாபாவின் தவ்தியோ மிகவும் தனிச்சிறப்பானதும் அசாதாரணமானதும் ஆகும்.



பாபா கண்ட யோகம்

பாபா, தமது உடம்பிலிருந்து வெவ்வேறு உறுப்புகளைப் பிய்த்தெடுத்து, மசூதியில் அவற்றைப் பல இடங்களிலும் தனியாக வைத்திருந்தார். ஒரு முறை ஒரு பெருந்தகை, மசூதிக்குச் சென்று பாபாவின் உடல் உறுப்புகள் தனித் தனியாக மசூதியின் பல இடங்களிலும் கிடப்பதைக் கண்ணடார். அவர் மிகவும் பீதியடைந்து, முதலில் கிராம அதிகாரிகளிடம் சென்று, பாபா கண்ட துண்டங்களாக வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டதை அறிவிக்க எண்ணினார். அவரே முதல் தகவல் தந்தவராகி விடுவார் என்று பயந்து. அவர் யாரிடமும எதுவுமே கூறாமல் இருந்து விட்டார். ஆனால் மசூதிக்குச் சென்றபோது, பாபா தேக ஆரோக்கியத்துடன் திடாகாத்திரமாக முன் போலவே இருப்பதைக் கண்டுதான் முதல் நாள் பார்தத்து வெறும் கனவு என்றே

எண்ணினார்.

பாபா தமது சிறு பருவத்தில் இருந்தே யோகம் பயின்றார். அவர் பெற்றுள்ள திறமையை ஒருவரும் அறிந்திருக்கவில்லை அன்றி ஊகிக்கவும் இல்லை. தமது சிகிச்சைகளுக்கு எவ்வித பணமும் அவர் வசூலிக்கவில்லை. தமது தகைமைகளின் திறத்தின் பயனால் புகழ்பெற்று பெருமையுற்றார். பல ஏழைகளுக்கும் துன்பப்படும் மக்களுக்கும் அவர் ஆரோக்கியம் அளித்தார். வைத்தியர்களில் எல்லாம் தலை சிறந்த புகழ்பெற்ற வைத்தியரான அவர் தமது தேவைகளை லட்சியம் செய்யவில்லை. மற்றவர்களின் நன்மைக்கும் சௌகரியத்திற்குமே எப்போதும் உழைத்தார்.

பாபா உணவை இரத்தல்

பாபா, எந்த ஷீர்டி மக்களின் வீடுகள் முன்னர் ஒரு பிச்சைக் காரனைப்போல் நின்று ' ஓ லாசி, ஒரு ரொட்டித்துண்டு கொடு" ஏன்று கூவி அப்பிச்சையை ஏற்க, தம் திருக்கரங்களை நீட்டி அருளினாரோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

கையில் தகரக் குவலையும்,ஸோலி என்ற சதுரத் துண்டும் அவர் வைத்திருந்தார். அவர் தினந்தோறும் சில குறிப்பிட்ட வீடுகளுக்குச் சென்றார். ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்குச் சென்றார். குழம்புப்பொருளான சூப், காய்கறிகள், பால், மோர் முதலியன தகரக் குவளையிலும், ரொட்டி முதலிய திடப்பொருள்களைத் துண்டிலும் வாங்கிக் கொண்டார். பாபாவுக்கு தம் நாவின் மேல்கட்டுப்பாடு உண்டாதலால் அது சுவையறிவதில்லை. எனவே பல்வேறு பொருள்களையும் ஒன்று கூட்டிய ருசியை எங்ஙனம் அவர் பொருட்படுத்தமுடியும்.

துண்டிலும் தகரக் குவளையிலும் கொண்டுவரப்பட்ட எல்லா உணவுப் பொருள்களும் ஒன்றாகக் கலக்கப்பட்டு பாபாவால் அவர் மனம் நிறைவெய்தும் வண்ணம் பகிர்ந்து உட்கொள்ளப்பட்டது. சில



குறிப்பிட்ட பதார்த்தங்கள் சுவையான வையாகவோ, மாறாகவோ இருப்பினும், பாபா, தமது நாக்கு முழுதும் சுவையுணர்வை இழந்து விட்டதைப் போலக் கவனிப்பதே இல்லை.

பாபா மதியம்வரை பிச்சையெடுத்தார். ஆனால் பிச்சையெடுப்பது மிகவும் நியதில்லாதிருந்தது. சில நாட்களில் சில சுற்றுக்களே சென்றார். சில நாட்களில் பகல் பன்னிரெண்டு மணி வரையும் எடுத்தார். இவ்வாறு சேர்க்கப்பட்ட உணவு, ஒரு சட்டியில் கொட்டப்பட்டது. நாய்களும், காக்கைகளும், பூனைகளும் அதிலிருந்து தாராளமாகச் சாப்பிட்டன. பாபா அவைகளை விரட்டியதே இல்லை.

மசூதியைப் பெருக்கிய பெண்மணி பத்து அல்லது பன்னிரெண்டு ரொட்டித் துண்டுகளை தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றாள். அவள் அங்ஙனம் செய்வதை யாரும் தடை செய்யவில்லை. கனவில் கூடப் பூனைகளையும், நாய்களையும் கடுஞ்சொற்களாலோ ஜாடைகளாலோ விரட்டியறியாத அவர் எங்ஙனம் ஏழ்மையான திக்கற்ற மக்களுக்கு உணவை மறுக்க இயலும்? அத்தகைய உயர் குணமுடையவரின் வாழ்க்கை உண்மையிலேயே ஆசிகள் நிரம்பப் பெற்றதாகும்.

ஷீர்டி மக்கள் அவரை ஆரம்ப காலத்திலே ஒரு கேனப் பக்கிரியாகப் கருதினார். இப்பெயராலேயே அவர் அறியப்பட்டார். இரந்த பிச்சையான சில ரொட்டித் துண்டுகளை உண்டு வாழ்ந்த அவர் எங்ஙனம் மதிக்கப்பட்டு மரியாதை செய்ய முடியும். ஆனால் இந்தப் பக்கிரியோ உள்ளத்திலும், கையிலும் மிகவும் தாராளமானவராகவும், அவாவற்றவராகவும், தர்ம சிந்தனையுடையவராயும் இருந்தார். ஸ்திரமில்லாதவராயும், இருப்புக் கொள்ளாதவராயும் புறத்தில் தோன்றினாலும் அகத்தில் உறுதியுள்ளவராயும் நிதானம் உள்ளவராயும் இருந்தார். அவருடைய வழியோ அறிவுக் கெட்டாதது. எனினும் அச்சிறு கிராமத்தில்கூட அன்பும் ஆசீர்வாதமும் உள்ள சிலர் பாபாவை பரமாத்மா என்றே உணர்ந்து மதித்தனர். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி கீழே தரப்பட்டுள்ளது.

தாத்ய கோட பாட்டீலின் தாயார் பாயாஜபாயி ஆவர். அவர் தினந்தோறும் மதியம் ரொட்டியும், காய்கறிகளும் அடங்கிய கூடையைத் தன்தலையில் வைத்துக்கொண்டு காடுகளுக்குப் போவது வழக்கம் புதர், பூண்டுகளில் பல மைல் கணக்கில் அவ்வம்மையார் அலைந்து திரிந்து கேனப்பக்கிரியைக் கண்டுபிடித்து, அவர் பாதத்தில்வீழ்ந்து, அடக்கமாகவும், அசைவு இல்லாமலும் தியானத்தில் அமர்ந்திருக்கும் அவர் முன்னர் இலையை விரித்து, உண்ணக்கூடிய பொருள் களையும், காய்கறிகளையும், ரொட்டி முதலியவற்றையும் அதன்மேல் வைத்து, அவரைப் பலவந்தமாக உண்பித்தார்.

பாயாஜபாயின் நம்பிக்கையும் சேவையும் வியக்கத்தக்கதாகும். ஒவ்வொரு நாளும் அவர் காட்டில் மதிய வேலைகளில் அலைந்து திரிந்து, உணவை உண்ணும்படி பாபாவை வற்புறுத்தினார் .அவருடைய சேவை,உபாசனை, தவம் என்று எவ்விதப் பெயரிட்டு அதை நாம் அழைத்தாலும், இறுதி மூச்சி வரையிலும் பாபா அதனை மறக்கவில்லை.

அவர் செய்த சேவையை முழுமையும் ஞாபகத்தில் கொண்ட பாபா, அவரது மகனுக்கு அபாரமான அளவிற்கு உதவி செய்தார். தாய்க்கும், மகனுக்கும் அவர்களது கடவுளான பக்கிரியின்மீது பெருமளவிற்கு நம்பிக்கையிருந்தது. பாபா அவர்களிடம் அடிக்கடி"ஆண்டித்தனமே உண்மையான பிரபுத்தன்மையாகும். ஏனெனில், அது எப்போதும் நிலைத்து இருக்கிறது. புகழ்பெற்ற பிரபுத்தனமெல்லாம். (செல்வமெல்லாம்) நிலையற்றவை" என்று கூறுவார் சில ஆண்டுகளுக்குப் பின்னால் பாபா காட்டுக்குப் போவதை விட்டு விட்டு கிராமத்தில் வசிக்கத் தொடங்கினார். தமது உணவை மசூதியிலேயே உட்கொள்ளத் தொடங்கினார். அதிலிருந்து பாயாஜபாயியின் காடுகளில் சுற்றி அலையும் தொந்தரவுகள் முற்றுப் பெற்றன.

* * *

மனிதனுக்குத் துன்பங்கள் அத்தனைக்கும் மூல காரணம் ஆசை ஒன்றுதான். ஆசையை விட்டவனே இன்பத்தை அடைவான். ஆசையை விடாதவன் துன்பத்தில் துடித்துத் துயரமடைந்து மாள்வான்.

மலேரிய ஜுரம் வந்தவனுக்கு கற்கண்டு கசக்கும். அதுபோல் பந்த பாசங்களில் உழல்வனுக்கு கடவுள் பக்தி கசக்கும்.

கடவுள் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆகவே கடவுள் இல்லை என்றால், உயிர் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆகவே உடலில் உயிர் இல்லை என்பதா?

- வாரியார் சுவாமிகள் -

# அருள் மணம் கமழும் திருவிழாக்கள்

நமது ஆலயங்களில் திருவிழாக்கள் முறையாக நடைபெறுமிடத்து அவை சீரும் சிறப்பும் பெற்று விளங்குவதைக் காணலாம் இத்தகைய ஆலயங்களுள் இணுவில் அருள் மிகு ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திருக்கோயில் சைவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்பட்டு முதன்மை பெற்றுத் திகழ்கின்றது. இவ் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்கள் ஆகம விதிகளை அனுசாரித்து நடத் தப் பெறுகின்றமையால் அடியார்களிடையே பக்தி



உணர்வை ஏற்படுத்துகின்றன. அத்துடன் இந்தத் திருவிழாக்கள் அருள் மணம் கமழும் பேறு பெற்றவை. இதனால் இணுவில் வாழ் சைவப் பெருமக்கள் பலரும் தத்தம் கவலைகளை எல்லாம் மறந்து மகிழ்ச்சி கொள்ள இவை பெரிதும் உதவுகின்றன.

மேலும் திருவிழாக்காலங்களில் இந்தக் கிராமத்திலும் அயல் கிராமங்களிலும் வாழும் மக்கள் ஆலயத்தில் ஒன்று கூடுவதனால். அவர்களிடையே ஒற்றுமை உணர்வும் ஏற்றத் தாழ்வின்மையும், ஒருவரை மற்றவர் மதித்து நடக்கும் சிறந்த பண்பும் உருவாகின்றன. அத்துடன் ஓரிடத்தில் குவிந்திருக்கும் செல்வமும் பலரிடத்தில் பரவுவதற்கு வழிகள் ஏற்படுகின்றன. எனவே, திருவிழாக்கள் தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் நன்மை அளிப்பவை. அதனால் சமூகத்தினர் பலரும் நலன்கள் பலவற்றை பெறுவதுடன் அவர்களுக்கு இறை உணர்வையும் ஏற்படுத்தி விடுகின்றன.

மகோற்சவத்தில் கொடியேற்றத்துக்கு அடுத்ததாக இரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் சிறப்பு பெற்று விளங்குகின்றன. ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் திருக்கோயில் தேர்த்திருவிழாவைப் போல மகிழ்ச்சியை தரத்தக்க விழா வேறொன்றில்லை. தேர்த்திருவிழா அன்று அதிகாலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நிறைவு பெற்றதும் கொடிமரப் பூஜை நடைபெறும். அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் பஞ்ச முக விநாயகருக்கும் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியருக்கும், சண்டேசுவரருக்கும் தீப அலங்காரங்களுடன் பூசைகள் நடைபெறும். பஞ்சபுராணம் பாராயணம் செய்யப்படும். பின்னர் அலங்காரம் செய்யப்பட்ட பீடத்தில் பஞ்சமுக விநாயகப் பெருமான் ஆரோகணித்து வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமானும் சண்டேசுவரரும் இரு மருங்கிலும் வர மங்கள வாத்தியங்கள் ஒலிக்க பக்தர்கள் மலர்கள் துவ, கொடி, குடை ஆலவட்டங்கள் அசைந்து வர தேருக்கு எழுந்தருளும். காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

பஞ்சமுக விநாயகப் பெருமானின் அருள்மிகு திருக்கோலத்தைக் கண்டு களிப்பவர்கள் புண்ணியப் பேறுடையவர்கள். எம் பெருமான் வினை தீர்க்கும் விநாயகப் பெருமான். தேரில் எழுந்தருளியதும். தீபாராதனை நடைபெறும். அடியார்கள் தேருக்கு முன்பாக குவித்து வைத்திருக்கும் தேங்காய்களை உடைத்து தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவு

இணுவை மூர்த்தி

செய்வர். தேர் வ்டத்தை அடியார்கள் பிடித்துக் கொண்டு அரோஹரா, ஸ்ரீ பரராஜசேகரப் பெருமானுக்கு அரோஹரா, என்னும் ஓசையுடன் தேரை இழுக்க அது அசைந்து செல்லும் காட்சி பார்த்துப் பரவசப்பட வேண்டியது.

பஞ்சமுக விநாயகப் பெருமானின் தேர்முன்னே செல்ல அதனைத் தொடர்ந்து முருகப் பெருமானின் தேரும் சண்டேசுவரப் பெருமானின் தேரும் வீதி உலாவரும். நேர்த்திக் கடன்களை நிறை வேற்றுவதற்காக அங்கப் பிரதட்சணம் செய்யும் அடியார்களையும், கற்பூரச் சட்டியை ஏற்றிய வண்ணம் பஞ்சமுக விநாயகப் பெருமானின் புகழ் பாடும் அன்பர்களையும்; பஜனைப் பாடல்களைப் பாடிக் கொண்டு பெருமான் பவனிவரும் தேரைப் பின் தொடரும் பக்தர்களையும் வீதியில் காணும் போது எங்களையும் அறியாமலேயே எங்கள் உள்ளம் இறைவன் பால் ஈர்க்கப் படுகிறது பஞ்சமுக விநாயகர் பவனிவரும் சித்திரத் தேரில் அழகுற அமைக்கப்பட்ட மணிகள் அசைந்தாட அதனால் எழும் ஓசை அடியார்களை மெய்மறக்கச் செய்து ஆனைமுகப் பெருமானின் அருட்கடாட்சத்தில் திளைக்கச் செய்கிறது.

தேரோடும் வீதியில் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் பந்தலடியில் தேர்கள் சிறிதும் நேரம் தரித்து நிற்கும். பஞ்சமுக விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகியோருக்கு மலர் மாலை சாத்தி தீபாராதனைகள் நடைபெறும். வெளிவீதியைத் தேர் சுற்றிக்கொண்டு ஆலய வாசலுக்கு வந்ததும் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கும், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமானுக்கும், மலர் மாலை சாத்தி விசேட ஆராதனைகள் நடைபெறும் பூசைகள் நிறைவு பெற்றதும் பக்தர்கள் நறுமணம் கமழும் பன்னீரைச் சொரிய பஞ்ச முக விநாயகப் பெருமான், முருகப் பெருமான், சண்டேசுவரர் ஆலய வசந்த மண்டபத்திற்கு ஆடி அசைந்து செல்லும் காட்சி கண்டு களிக்க வேண்டியதொன்றாகும் எனவே, தேர்த் திருவிழா ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது என்று கூறுவது சாலவும் பொருந்தும்.

தீர்த்தத் திருவிழா பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான அருளலைக் குறிக்கும். இவ்வாலயத்தில் தீர்த்தத் திருவிழாவன்று வழமைபோல அபிஷேக ஆராதனைகள் நடை பெற்று முடிந்ததும், விநாயகர், முருகன், சந்தான கோபாலர், மகாலக்குமி, சண்டேசுவரர் ஆகியோரை எழுந்தருளச் செய்து அடியார்கள் ஆயிரக் கணக்கில் புடை சூழ கோபுர வாசலை வந்தடைந்ததும் எதிரேயுள்ள தீர்த்தக் கிணற்றடியில் தோரணம் மாவிலை, பூமாலை என்பனவற்றால் அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் பக்தர்களுக்கு காட்சி கொடுப்பதற்காக வீற்றிருக்கச் செய்வர். பால், இளநீர், தயிர், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம் மற்றும் வீபூதி சந்தனம், குங்குமம், பன்னீர் ஆகியவற்றால் சன்டேசுவரருக்கு அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறும்.

மேலும் வருடாந்த உற்சவங்கள் கால வரையறையோடும் பக்தி சிரத்தையோடும் நடை பெறுவதறகு பிரதம குருக்கள் முதற் கொண்டு அடியார்கள் வரை சகலரும் தங்கள் ஒத்துழைப்பை வழங்கி வருவது பாராட்டுதற்குரியது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆலயச் சுற்றாடலில் உள்ள இளைஞர்கள் தாமாக முன்வந்து சரியைத் தொண்டுகள் பல புரிவதையும் திருவிழாக்கள் எல்லாம் சிறப்பாக நடைபெறுவதற்கு தங்கள் பங்களிப்பை நல்குவதையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

சுருங்கக் கூறின் மகோற்சவ காலத்தில் ஆலயத்தின் புனிதமும் அந்தணப் பெருமக்களின் வேத பாராயண ஒலியும் அடியார்கள் பக்திப் பரவசத்துடன் பாடும் பஜனைப் பாடல்களும், இனிய நாதஸ்வர ஓசையும் அங்கப் பிரதட்சணம் செய்யும் அன்பர்களது உருக்கமான வேண்டுதல்களும் இறைவனது திருவருட் பிரபாவத்தை பன்மடங்கு பெருகச் செய்து ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்களை அருள் மணம் கமழச் செய்து விடுகின்றன.

# தேர்த்திருவிழா

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் என்னும் மகத்துவ மிக்க தெய்வம் யாழ்ப்பாணத்தரசர் காலத்திலே நிர்மாணிக்கப்பட்டது. விநாயக பரத்துவம் பெருமகிமையுள்ளது. மூலமுழுமுதற் பொருளாக நின்று காரிய சித்திக்கு உறுதுணை புரிந்து அருள் பாலிக்கும் பெருந்தெய்வம் விநாயகர். இணுவிலிலே கோயில் கொண்டமர்ந்து அருள்புரியும் விக்னேஸ்வரப் பெருமான் கல்வி,கலை,ஞானம் அனைததையும் தம்மை வழிபடுபவர்க்கு ஒருங்கே அருளி இன்பஞ் செய்பவர். கலா ஞான சுரபி மூலகணபதி இணுவை பரராசசேகரப்பிள்ளையாரது கீர்த்தி உலகளாவியது. இவ்வாலயத்திலே உறையும் பஞ்சமுக விநாயகப் பெருமான் பெரும்பலமும், பேரருளும் கொண்டவர். பஞ்சமுக விநாயகனை நெஞ்சமெனும் தாமரையிலிருத்தி வழிபடும் பக்தர்கள் உலகப் புகழ்பெற்று மிளிருவர் என்பதற்கு இணுவை மக்கள், கலைஞர்கள் கல்விமான்கள் பெருஞ் சான்றாகவுள்ளனர்.

தத்துவார்த்தத்தில் தேர்த்திருவிழா அழித்தற்றொழிலைக் குறிக்கும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலும் மகோற்சவக் கிரியையிலே இடம்பெறுகின்றன. உலக இயக்கத்திற்கே மூலமாக நிற்கும் சிவனருட் பிரவாகத்தை தத்துவஞானிகள் மிகுந்த இயற்கை நிலைப்படுத்தி - விஞ்ஞானத்தூடாக விளக்கி ஆன்மீக வழியாக எளிமைப் படுத்தி நடைமுறைப்பாகமாக அனைத்து மக்கட்கும் பயன்படத்தக்க வகையிலே வகுத்துத் தந்திருக்கின்றனர். மிகவிசித்திரமாகவும் மிகுந்த நுட்பமாகவும் மிகுந்த நுண்திறத்துடனும் படைக்கப்பட்டுள்ள இப்பிரபஞ்சமானது சரியான தடத்தில் பிசகாது இயங்குவதற் கென்றுதான் இறையருள் முழு முதற்பொருளாக நின்று இயக்குவிக்கின்றது. இயக்குபவன் இறைவனாகிய சிவன். இயக்குவி திருவருளாகிய சக்தி. இச்சக்தியின் வடிவமே பிருதுவி அப்பு, தேயு, ஆகாயம், எனும் ஐம்பூதங்களாகும். இவ்வைம் பூதங்களையும் கட்டுப்படுத்தியும் ஏவியும் தனது பெரும் ஆற்றலை உயிர்களுக்குக் காட்டி நிற்பவன் கடவுள், அவன் அண்டங் கடந்தபொருள்.

உயிர் வர்க்கங்களை உலகிலே படைத்த இறைவனே அவ்வுயிர்கள் சுவாசித்து உயிர் வாழவென்று வாயுவையும் படைத்தான். காலே மிக உண்ணும் கணபானமாகிய பாம்புகளையும் மனிதர்களின் உடலுட் படைத்துள்ள நுட்பம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. உணவில்லாது உண்ணாவிரதம் இருப்பதற்குக் கூட மனிதர்க்கு இயலும் ஆனால் காற்று வளி இல்லாவிட்டால் மனிதர் உயிர்வாழ முடியாது. ஏன் பிற உயிர் வர்க்கங்களும் உயிர்வாழ முடியாது. எனவே ஆக்கற்தொழிற் அல்லது படைத்தற்தொழில் புரியும் இறைவனின் பெருமையைச் சிந்திக்க முடிகிறதல்லவா? மண்ணைப் படைத்த இறைவன் விண்ணையும் படைத்தான். மனிதன் பறவையைக் கண்டான் விமானம் படைத்தான். இது தானே படைத்தல் விசித்திரம்.



வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன்
முதுநிலை விரிவுரையாளர்
சப்பிரகமுவ பல்கலைக்கழகம்

தேர்த்திருவிழா சங்காரமாகிய அழித்தற்றொழிலைக் குறிப்பது எப்படி என்பதே இக்கட்டுரையின் அடிநாதம். தேர் என்னும் ரதம் அழியாத பொருள். ஊழிக்காலத்தில் அதாவது உலகம் அழியும் கட்டத்தில் இறைவனே அழியாத பொருளாக நின்று உலகைக் காக்கவே அழித்தல் தொழிலை உருவகமாகத் தேர்த்திருவிழாவில் உணர்த்துகின்றனர். மனிதத் தத்துவத்தைப் புனிதப்படுத்துவன கோயில் விழாக்கள். அதிலும் உலகப் பொதுமையை ஒற்றுமையுணர்வை மனநெகிழ்வை வெளிப்படுத்தும் சமூகத் தேவையைத் தேர்த்திருவிழா எமக்கு உணர்த்துகின்றது. தேரிலே இறைவன் பவனிவரும் வேளை ஏனைய உணர்வுகள் அனைத்தும் அடங்கி விடும் நிலை ஒடுங்கி விடும் நிலை தன்னையிழந்தநலம் உண்டாகிறதல்லவா? இதுதான் உயிரொடுக்கம், தன்னல மறுப்பும் இறை நலவிருப்பும், தானொழிந்து இதுவாகும் பேருணர்வும் மனிதர்களுக்கு வாய்க்க வேண்டுமென்றால் தேர்த்திருவிழா அவசியமாகிறது.

தேர்தானே அசையாது. வடம்பிடித்திழுக்க அசைவது. இழுப்பதற்கு முயற்சி தேவை. முயற்சி பலமிக்க சக்தியாகப் பரிணமித்து உடல் வியர்த்து, நாடி துடித்து உளம் இசைந்து, தரையிலே காலை ஊன்றிக் கைகளாலே உன்னி இழுக்கத் தேரசையும். தேரின் அசைவை நெறிப்படுத்தவே ஓடும் தேருக்குக் கட்டை வைக்கிறார் ஆசாரியார். வேகங் கெடுக்கவென்றே அவர் தேர்த்திருவிழாவன்று பணிபுரிகின்றார்.

இங்கு நீங்கள் நேரெதிர் முரணான ஒரு செயற்பாட்டினைப் பார்க்கலாம். ஒன்று விசை, மற்றது தடை. உலகமே இவ்விரு இயக்கங்களிலே தான் நின்றியங்குகின்றது. ஒன்று ஆக்குதல் மற்றது அழித்தல். இந்த இரண்டு தொழிற்பாடுகளும் தேர்த் திருவிழாவன்று திரும்பத்திரும்பத் தொழிற்படுகின்றன. இதனாலேயே மனித உடம்பின் உண்மை, மனத்தின் பக்குவம் என்பன புதிய பரிணாமம் பெறுகின்றன. உள்ளத்தின் பக்குவமே அமைதி அனுபவத்தின் பயனாகவேண்டும் என்பதே சைவசித்தாந்த தத்துவத்தின் முடிவு. அதற்கென வகுக்கப்பட்ட அருமையானதொரு நடைமுறையேதேர்த்திரு விழாவாகும். இது முழுக்கமுழுக்க விஞ்ஞான தத்துவமல்லவா?

அழித்தல் என்றால் எவற்றை அழித்தல்? என்ற கேள்வி எழும் இவ்வினாவிற்கு விடை வேண்டாதவற்றை அழித்தல் என்பதாகும். ஆயின் வேண்டாதவை எவையெவை என்ற பிறிதொரு சிந்தனை எழுமல்லவா? இதற்குரிய விடை உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

வேண்டாத குணங்கள் பல. ஆசை, அவா பொறாமை, நிந்தனை, பொய், களவு, கள், காமம், கொலை, கோபம், அகந்தை, ஆணவம், கர்வம், மமதை, செருக்கு, பிறர்க்கு இடர் நினைத்தலும் செய்தலும் வஞ்சனை, அநீதியிழைத்தல், தெய்வநிந்தனை என்பனவெல்லாம் அழிக்கப்பட வேண்டிய குணங்கள், வேண்டாத சத்துராதிகள். இவற்றையெல்லாம் ஒடுக்கவே இறைவன் தேரேறி இவர்ந்துாருகிறார். அழியும் பொருட்களெல்லாவற்றையும் நித்தியமானவை என்று எண்ணுவர் உலகவர். இதனாலேயே தேர்த்திருவிழாவில் அழித்தற்றொழில் உணர்த்தப்படுகிறது. திரும்பத் திரும்பத் தொழிற்படுத்துவது கடவுளது பரங்கருணை. கடவுட்கருணையை மறுப்போர் தாமே என்று மார்தட்டுவர்.

இதனாலேயே முருகன் புரிந்த மறக்கருணையை சூர்மார்பும் குன்றும் துளைத்த வேலோடு பொருத்திப் பேசுவார் அருணகிரிநாத சுவாமிகள். மார்பைப் பிளத்தலே அகந்தையை அழித்தல் என்பதாகும். இது சைவசித்தாந்த தத்துவம், முருக தத்துவம், ஆன்ம தத்துவமாம்.

தேர்த்திருவிழாவின் முதற்பணியானது மனிதரிடத்துக் கூடப்பிறந்த ஆணவமான மலத்தை அகந்தையை அழித்தல் என்பதாகும். நான் அடங்கவேண்டும் என்பர்

## மோதகத்தின் தத்துவம்

கணபதி வழிபாட்டில் மோதகம் மிக முக்கியமான நிவேதனம் பொருள். மோதகம் விநாயகரின் வயிற்றைக் குறிக்கும். வயிற்றினுள் சகல புவனங்களும் அடங்குவதை உள்ளடக்கிய பருப்பு, தேங்காய் துருவல், சர்க்கரை ஆகிய மூன்றும் மாவால் மூடப்பட்டிருக்கின்றது. மாவாகிய பாகம் மாயை. பருப்பு சத்தி தேங்காய்த் துருவல் பத்தி, சர்க்கரை ஆனந்தம் அவர் திருகரத்தில் உள்ள மோதகம் இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகின்றது.

ஞானிகள். "என்னை எனக்கறிவித்தான்எங்கள் குருநாதன்" எனப்பாடியுள்ளார் கொழும்புத் துறைமகான் பெருஞானி சிவயோக சுவாமிகள். இச்சிந்தனை தேரடியிலே எழுந்த சிந்தனையன்றோ!

இளமை செல்வம் என்பன நிலையாதவை. உலகம் நிலைக்காதது, உயிர்வர்க்கம் நிலையற்றவை, எல்லாம்பொய் மாயா உலகம். மாணிக்க வாசக சுவாமிகள் ;;;"யானேபொய், என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்" என்று தானே திருவாசகத்திலே அருளியுள்ளார். பொய்யான வேண்டாத குணங்களை அடக்கவே தேர்த் திருவிழா நிகழ்கிறது. இது நடைபெறுவது அவசியம். இத்தீங்குகளை மாய்ப்பதற்கென்றே அகோரவடிவத் திருக்கோலமெடுத்து, அம்பும் வில்லும் தாங்கிய வடிவத்திலே புரவிகளாகிய குதிரைகள். பூட்டப்பட்ட திருத்தேரிலே இறைவன் பவனி வந்து நல்லருளைப் பாலிக்கின்றான் என்பதே தத்துவார்த்தம்.

அழித்தலை - நீக்குதல், எரித்தல், சாம்பராக்கல், பொடிசெய்தல், துவசம் செய்தல், அக்கினி காரியம், அடக்கம் செய்தல் என்றெல்லாம் குறிப்பிடுவது உண்டு. இல்லாமற்செய்தல் என்பதும் இறைவனாலேயே பரிபூரணமாக்கப்படும் என்பதும் பேருண்மை. இதனாலேயே முருகப்பெருமானோடு யுத்தம் புரிந்த சூரன் சிங்கன், தாரகனையும் நினைத்த மாத்திரத்திலேயே பரிபூரணமாக அழித்தொழிக்க இயலவில்லை என்ற கந்த புராண நிலையை நாம் சிந்திக்க வேண்டாமா! சூரனை முருகப் பெருமான் அழித்தொழித்தாரா என்றால் இல்லை என்ற விடை கிடைக்கும். இன்னும் தான் வாழ்கிறான். வேலும் மயிலுமாக வாழக்கிடைக்கிறது ஆனால் எது அழிந்தது? அகந்தை ஆணவம் அழிந்தது. ஆளைவிட்டுக் கெட்ட குணத்தை மட்டுமே அழித்தொழித்த கருணை வள்ளல் கந்தப்பெருமான். தமிழ்க்கடவுளின் இரக்க சிந்தை எண்ணப்பட வேண்டும் என்பதே கந்தபுராண கலாசாரத்தின் அடிநாதம். யாழ்ப்பாண மக்களின் பெரும் புராணச் சொத்து. சமய உணர்வு. நலன் தரும் பொக்கிஷம்.

இதனை உலகம் உணரத்தான் வேண்டும் ஏனெனில் முடிந்த முடிபான சமயப் பேருண்மை .முழுவதுமுண்மை. எனவே அழிந்து போவன பொய்ம்மைகளே என்ற உண்மை நிலையை உறுதிப்படுத்துவதற்கே அழித்தல் என்றதொழிலையும் ஆண்டவன் இயற்றுகிறான்.

# பஞ்சமுக விநாயகரே ஆடீரூஞ்சல்

மூதறிஞர் வை.அ.கதிர்காமநாதன்

சீர்பூத்த பேரொளியா யுயிர்க்குயிரா யகண்டிதமாய்
சிறந்தோங்கும் ஞானவடிவாம் நின்மல மூர்த்தியே
பேர்பூத்த குணங்குறிக ளிகந்தபழ மறைக்கொழுந்தே
பெருமைசான்ற மன்னனாம் பரராச சேகரன்
பார்பூத்த புகழானமைந்த பெருங்கோயில் குடிகொண்ட
பஞ்சமுக விநாயகரே நின்னூஞ்சல் பாடக்
கார்பூத்த இணுவைநகர் களிப்புறக கருணைசெய்யுங்
கணபதிதன் திருசரணம் கருத்துள் வைப்பாம்.

அஞ்செழுத்தா லங்ககர நியாசம் ஆற்றி
ஆன்மார்த்த பூஜைசெயும் அந்தணர் தமக்கு
அஞ்செழுத்தின் வடிவாய் அமலமாய் அயன்மால்.
அறியவொண்ணாப் பரிபூரண வடிவம் காட்டி
அஞ்செழுத்தின் முன்னின்ற ஓங்காரப் பொருளே
அஞ்ஞான விருளோட்டு மற்புத மூர்த்தியே
பஞ்சின் மெல்லடிப் பாவையர்சூ ழிணுவை
பஞ்சமுக விநாயகரே ஆடீரூஞ்சல்!

பஞ்சப் பிர்மமாம் வடிவே யென்கோ
பாவாணர்க கருள்புரியும் வடிவே யென்கோ
தஞ்சமடைந் தார்க்குத் தயாநிதியே யென்கோ
தத்வா தீதமாம் பொருளே யென்கோ
வஞ்சமிலார் நெஞ்சின் வாழ்வே யென்கோ
வானாடர்க்கு மரிய தெய்வமேயா தென்கோ
பஞ்சவில்வக் காடுசெறி யிணுவை மேவும்
பஞ்சமுக விநாயகரே ஆடீரூஞ்சல்!

சந்திரசே கரனாகும் இறைவனே தானாகிச்
சகலசரா சரங்களும தன்னகத தொடுங்கப்
பந்தம தகற்றுமிப் படிவமுங் காட்டிப்
பாருளார் போற்றப் பரிந்தருள் புரியும்
சிந்தனைக்கு மெட்டாச் சிவானந்த மூர்த்தியே
சிறியேமை யாண்டருள் செய்யுந் தெய்வமே
கந்தமலர்ப் பொழில்சூ ழிணுவை மேவும்
கல்யாண மூர்த்தியே ஆடீரூஞ்சல்!

ஐந்தான நின்திருமுகத் தழகை யிம்பரோ
டும்பரும் வந்து நாளும் பருக
நந்தாவருள் கொழிக்கும் நாயகனே நல்லிணுவை
நகருளார் செய்த நற்றவப் பயனே
சிந்தாகுலந் தீர்த்து நல்வாழ் வளிக்கும்
செந்தாமரைச் சீரடி சேப்ப வுந்திப்
பைந்தா துகுக்குஞ் சோலைசூ ழிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்!

வேதமாய் வேதப்பொருளாய் வேதநாயகனு மாகி
விதீந்திராதி தேவர்க்கு நாதனு மாகி
ஆதியாய் ஆதிமத்யாந்த விகீன னாகி
ஆதுலர்க் கன்னைதந்தையாய் நின்றமெய்ப்
போதமாய் அட்டமூர்த்தியுந் தானே யாகிப்
போதுடன் சென்று போற்றுவார் தங்கள்
பாதக மனைத்தும் போக்கியெழுந் தருளும்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்!

பாரோங்கு வேதங்கள் கால்க ளாகப்
பரவரிய வாகமங்கள் விட்ட மாக
ஏரோங்கு பலகலைகள் வடங்க ளாக
எண்ணுமுப நிடதங்கள் பலகை யாக
சீரோங்கு பிரணவமே நற்பீட மாகச்
சிறந்தநல் மந்திரமே வடிவ மாகப்
பேரோங்கு நல்லறிஞர் போற்று மிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல் !

கருதரிய திருமுகங்க ளோரைந்து மாடக்
காதார்குண் டலமாடக் கவினார்மேனி யாடப்
பெருவயிறாடப் பிறைசேர் முடியு மாடப்
பூதகணங்க ளாடப் புண்ணியர்தா மாட
சுரும்ப ரிசைபாடச் சூழ்கொன்றைத் தாராட
சுரிகுழலார் தாமாடச் சிறாரு மாட
அரும்பவிழ் சோலைசூ ழணியாரிணுவை யமர்
அஞ்சுமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்

பஞ்சானனைந் திரிதரும் வெஞ்சார லிருந்து
பல்லாண்டு தவங்கிடந்த பொதியில் முநியும்
விஞ்சிய வொளிகாலு மிவ்வியன்பே ருருவை
விம்மிதனாய் வியந்து நிற்பவது கண்டு
அஞ்சாதே யென்ற பய மளித்த ஐயனே
அமரரும் நாடோணா அற்புதக் குன்றமே
மஞ்சுலாம் புரிசைசூ ழிணுவை மேவும்
மன்னுபுகழ் விநாயகரே யாடீ ரூஞ்சல்!

பஞ்சாங்கமுட நட்டாங்க வழிபாடு செயும்
பல்லோர் தமக்குப் பரிந்தருள் பாலித்து
பஞ்சாங்கந் தவறாது தங்கடன் புரிவார்
பண்ணுட னோதுதேவாரம் பல வொலிக்கப்
பஞ்சாங்கமுட னடியார் பலருஞ் சூழப்
பவனிவருந் திருக்கோல வுலாக் கண்ணுறும்
பஞ்சின் மெல்லடிப் பாவையர்சூ ழிணுவைப்
பஞ்சமுக விநாயகரே யாடீ ரூஞ்சல்!

வேண்டுவார் வேண்டுவதே யீவா னென்னும்
வியன்றிருநா வுக்கரசின் வாக்கும் பொய்யோ
ஈண்டுவா வென்றழைத்துன் திருவடி நீழல்
இருத்துங் கருணைதா னென்பா லிலையோ
கூண்டுவாழ் கிளிபோ லலமந்து கிடந்தேற்குத்
தந்தையுந் தாயு மாகுந்தற் பரனே
நீண்டுவா னுலகளக்கும் பொழில்சூ ழிணுவை
நிமலனே யெனையாளு மமரர் கோவே!

வாழி

மாண்புறுசித்தாந்தசைவநெறிவாழி!
மன்னுசிவா கமமும் மறையவரும் வாழி!
காண்டொறு மாலயங்கள் கவினுற வாழி!
கண்டிகையும் நீறும் நனிசிறந்து வாழி!
ஆண்டகையர் அறம்பல புரிந்து வாழி!
அணியிழையார் இல்லற தர்மமும் வாழி!
சேண்பொலி திருக்கோ புரங்கள் வாழி!
செந்தமிழன்ன பஞ்சமுகேச வாழி!வாழி!

# மங்களம்

ராகம்: சுருட்டி தாளம் ஆதி

பல்லவி

பரராஜசேகரக் கணபதிக்கு மங்களம்
புரமான இணுவைக்கும்
அடியார்க்கும் மங்களம்.

அநுபல்லவி

நடராஜன் சிவகாமிக்கும்
நாரணன் மகாலஷ்மிக்கும்
வடிவேலன் கந்தனுக்கும்
வள்ளிகுஞ்சரியருக்கும்

சரணம்

பஞ்சமுக விநாயகர்க்கும்
பைரவப் பெருமானுக்கும்
கஞ்சமஹாலஷ்மிக்கும்
காளிங்க நர்த்தனர்க்கும்
அசிஞ்சலருள் லிங்கேஸ்வரர்
அருள்தஷிணாமூர்த்திக்கும்
மிஞ்சுநவக்ரஹம் நால்வர்
மிளிர் சண்டேஸ்வரருக்கும்.

பிரம்மஸ்ரீ
இயலிசை வாரிதி
ந.வீரமணி ஐயர்.





**Let us pray, 'Lead, kindly light' a beam will come through the dark, and a hand will be stretched forth to lead us.**

**- Swami Vivekananda -**

**With Best Wishes From**

## S. SINNATHURAI & BRO

**BG BUILDING**

**102, WOLFENDHAL STREET**

**COLOMBO 13**

**PHONE: 328729 , 431776**




புலவர்மணி பெரியதம்பி பிள்ளையினதும், சுவாமி விபுலா நந்தரினதும் புலமையின் அடித்தளம் வேதாந்தமே யாகும். வேதாந்தம் குறுகிய சமய நோக்குடயதன்று. பரந்த நோக்கும்,சமய சமரச மனப்பாங்காகும் மனிதர்க்கான சேவை மனப்பாங்கும் கொண்டது. இந்நோக்கை வேதாந்தம் கொண்டமைக்கான சமூக, வரலாற்றுச் சூழல்களை இந்திய சரித்திரத்திலே காணமுடியும்.

புலவர்மணி பெரியதம்பி பிள்ளைக்கும் விபுலானந்த அடிகளாருக்கும் வேதாந்தப் பார்வையினை அளித்தமையில் மட்டக்களப்பின் சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியத்துக்கு முக்கிய இடமுண்டு.

சைவசித்தாந்தம் அதிகாரப்படிமுறைகளை வலியுறுத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம், என நான்கு படிகளைக் கொண்டது. மனிதர்கள் நான்கு படி நிலைகளில் நின்று செலாற்றினும் ஞானவான்களே உயர்ந்தோராக மதிக்கப்பெற்றனர்.

வேதாந்தம் அதிகாரப்படிமுறைகளை வற்புறுத்தும் ஒன்றல்ல. அனைவரையும் சீவாத்மாக்களாகக் காணும் தன்மையது. இன்னொரு நிலையில் சீவாத்மாக்கள் அனைத்தையும் இறைவனின் அம்சங்களாகக் காண்பது. இரண்டுமே இருவேறு உலகநோக்கைக் கொண்டவை.

யாழ்பாணத்தின் சமூக அமைப்புக்கும் சாதி இறுக்கத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்குமிடையே நெருக்கமான தொடர்புண்டு.

மட்டக்களப்பின் சமூக அமைப்புக்கும் சாதி இறுக்கமின்மைக்கும் வேதாந்தத்திற்குமிடையே நெருக்கமான தொடர்புண்டு. ஆறுமுகநாவலரை யாழ்பாணம் தந்தமையையும் விபுலாநந்த சுவாமிகளை மட்டகளப்புத் தந்தமையையும் இப்பின்ணணியில் நோக்குதல் பயன்தரும் முயற்சியாகும்.

மட்டக்களப்பிலிருந்து யாழ்பாணம் சென்ற விபுலாநந்த சுவாமிகளும் புலவர்மணி பெரியதம்பி பிள்ளையும் பின்னாளில் யாழ்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வியியற் துறைப்பேராசிரியராக இருந்து யாழ் மண்ணில் மணம் புரிந்து வாழ்ந்து மறைந்த மண்டூரைச் பேராசிரியர் சந்திர சேகரமும் வேதாந்த மரபையே தம் மதமாகக் கொண்டவர்கள் என்பதை நாம் மறந்து விடலாகாது.

மட்டக்களப்பின் கலாசார சமூக வேறுமாடுகளே வேதந்த மரபு மட்டக்களப்பில் காலூன்றவும் காலாயிற்று. ஆகம வழிபாடு முறையில் அமையாக கோயில் மரபும், பிராமணர் செல்வாக்கு அல்லாத சமூக அமைப்பும் குடிமரபோடு (சாதி) வழிபாடுகள் அமைந்திருப்பதும் குறைந்த சாதியினர் எனக் கருதப்பட்டோர் ஏனைய உயர் சாதிகள் தயவில் வாழாது சுயகாலில் நிற்பதும் முஸ்லிம், தமிழ் குடியிருப்புகள் அருகருகே இருப்பதும், மட்டக்களப்புச் சமூக அமைப்பிற் காணப்படும் தனித்துவமான சமய நெறியே இங்கு தேவையானது.

பேராசிரியர் சி.மௌனகுரு
கிழக்குப் பல்கலைக்கழகம்
மட்டக்களப்பு

ஊருக்கு ஊர் நிலவிய கண்ணகி அம்மன், மாரி அம்மன் திரௌபதை அம்மன் கோயில்களும் அங்கு நடைபெற்ற மன்றாட்டு, மந்திரமுறை, கலையாடல், தீப்பாய்தல் பள்ளயம், பலி போன்ற வழிபாட்டு முறைகளும் மட்டக்களப்பின் மக்கள் சமய நெறியானது. பின்னாளில் மட்டக்களிப்பிற்கு வந்த சைவமதம் கூட வீரசைவ மதமாகவே கொக்கட்டிச் சோலையில் வேரூன்றியது. அதன் பின்னர் தோன்றிய சமய இயக்கங்களூடாகவும் எழுந்த சைவசித்தாந்தம் இங்கு பாரிய செல்வாக்குச் செலுத்தாதுவிட இராமகிருஷ்ணமிஷனும், வேதாந்தநெறியுமே செல்வாக்குப் பெறலாயின.

மட்டகளப்பிலுள்ள மண்டூர்க் கந்தசாமி கோயில், தான்தோன்றீஸ்வரர் கோயில், மாமாங்கப்பிள்ளையார் கோயில் ஆகியவை அனைத்துச் சமூகங்களும் இணைந்து நடத்தும் கோயில்களாக அமைந்தமை மட்டகளப்பிற்குரிய பிரத்தியேக சமூக அமைப்பின் தன்மையினவாகும்.

எனவேதான் மட்டகளப்புக் கலாசாரத்தை சுவாமி விபுலாநந்தர் மகாபாரத கலாசாரம் என அழைத்தார். ஆறுமுகநாவலர் யாழ்பாண கலாசாரத்தை கந்தப்புராண கலாசாரம் என அழைத்தார்.

இந்தபின்னணியிலேதான் புலவர்மணியையும் நாம் நோக்குதல் வேண்டும். யாழ்பாணத்திற்குக் கல்வி பயிலச் சென்று அங்கு ஆசிரியராகக் கடமைப்புரியும்வாய்ப்பும் பெற்ற புலவர்மணி பெரியதம்பி பிள்ளையவர்கள் யாழ்பாணத்தில் நிலவிய சாதிப் பிரச்சனைகண்டு கிறிஸ்தவராக மாறி இந்தியா சென்று பசுமலையில் வேதம் பயின்றதும் பின் விபுலாநந்த சுவாமிகள் தொடர்பால் வேதாந்த நெறிக்குக் கவரப்பட்டதும் வரலாறு தரும் செய்தியாகும்.

சகல மக்களையும் சமமாகக்கருதும் புரட்சிகரமான சமயக்கொள்கையான வேதாந்தப் பார்வையை தம் வாழ்நெறியாக ஏற்றுக்கொண்டமையே புலவர்மணியினைச் சமூக நோக்கமிக்க முற்போக்குடைய பண்டிதராக்கியது எனலாம். அரசியலிலும் சமூகசீர்திருத்தங்களிலும் அவர் பங்கு கொண்டமைகள் காரணமும் இவ்வேதாந்த நெறிதந்த ஊக்கமேயெனலாம்.

மட்டுவிலில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலில் இன்னொரு இதே விதமான போராட்டம் நடைப்பெற்றது. இது பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஊராகும். தமிழர் நலம் பேணும் அரசியல்வாதிகளும் சைவமதம் காத்த அறிஞர்களும் மௌனம் காத்த வேளை புலவர்மணி மாவிட்ட புரம் கந்தசாமி கோயிற் போராட்டம் சம்பந்தமாகப் பினவரும் பாடலை எழுதினார்.

கோயிலைக் கண்டு கும்பிடப்போனேன்
குருக்களும் முகாமையும் குறுகி
வாயிலைப் பட்டி வேலியும் போட்டு
வளைத்துனைக் காவலில் வைத்தார்
காய்கறித்தோட்டமோ முருகா நீ
கால் நடையே சிறியோங்கள்
வாயிலை முகாமை
மனத்தினைதிறந்து
மனக்குறை தீர்த்தருள் பரனே.

கிண்டலாகவும், மனதில் தைக்கும்படி பாடுவதற்கு மேலாகத் தன்மையும் தாழ்த்தப்பட்ட ஒருவனாகக் கருதி மக்களோடு மக்களாக நின்று உளப்பாட்டுத் திண்மைப் பண்மையில் பாடும் முறை அவரின் வேதாந்த மனதின் முதிர்ச்சியால் வந்த ஒன்று என்றே கருதத் தோன்றுகிறது.

கற்றது கைமண் என்றாள்
கடல்போன்ற அறிவின் செல்வி
பெற்றது கடுகு நானேனா
பிடித்தது மலையின் வண்ணம்
மற்றிது யாரால் எந்தன்
மாதவா உன்னால் தானே
குற்றமே குணமாயக் கொள்க
கும்பிட்டேன் கீதைக் கோவே
- கண்ணதாசன் -

# திருத்தம்பலகாமம் ஆதிகோணநாயகர்



கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். எங்கள் தம்பலகாமம் ஊருக்குள் நுழைந்ததுமே கம்பீரமாகத் தோன்றுகின்ற, தமிழகத்துச் சிற்பாசிரியர்களால் உருவாக்கப்பட்ட எழில் கொஞ்சும் கோபுரம் ஆதிகோண நாயகரின் அருட் திறத்தை எமக்கு நினைவூட்டும்.

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆதிக்கம் நிறைந்த காலத்தில் சிறப்புடன் விளங்கிய திருக்கோணேசர் ஆலயம் 1624ம் ஆண்டு மதவெறி கொண்ட பறங்கியர் தளபதி கொன்ஸ்ரன்ரைன் டீசா என்பவனால் தரைமட்ட மாக்கப்பட்டுப் பொருள்களுங் களவாடப்பட்டன. அவ்வேளையில் கோயிலிலே திருத்தொண்டு செய்து கொண்டிருந்த தானத்தாரும் வரிப்பத்தாரும் இருபாகை முதன்மையெனும் பூசகர்களும் ஏனைய பக்தர்களும் கோயிலுள்ள புனிதச்சிலைகளை வாரியெடுத்துக் கொண்டு நாலா திசையிலுஞ் சென்று மண்ணில் மறைத்தும் காட்டில் ஒளித்து வைத்தும் வழிபட்டனர்

தம்பலகாமத்தருகிற் காட்டிலே ஒளித்து வைத்து வழிபட்ட திருவுருவங்களைக் கொண்டு போய்த் திருத்தம்பலகாமத்தில் இருந்த ஒரு கோயிலில் வைத்து வழிபட்டனர். பின்னர் கண்டியரசனின் துணை கொண்டு கோயிலைப் பெரிதாகக் கட்டி விதி முறைப்படி நடத்தி வந்தனர்.

பழைய மரபுகளை, குளக்கோட்டன் விதித்த முறைமைகளைப் பேணிக் காக்கும் ஆலயம் திருத்தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயம். வயல்சூழ் தம்பலகாமத்து மக்கள் தமது வாழ்க்கையைத் தமது ஊரில் செல்வ வளத்துடன் தொடரக் கோணநாயகர் அருள் பாலிப்பாராக.

ஏப்ரல் மாதம் 21ம் திகதி நடைபெற்ற கும்பாபிடேகம் ஆலயத்துச் சூழலில் உள்ள மக்களுக்குச் சுபீட்சத்தையும் அமைதியையும், இன்பத்தையும் சகல வளங்களையும் நல்கும் என்பதில் ஐயமில்லை.



**கா.சிவசுப்பிரமணியம்**
**தலைவர் ஆதிகோணநாயகர் கோயில் பரிபாலனசபை**

உலகெலாம் அன்புநெறி, அருள்நெறி தழைத்து ஓங்க ஆதிகோண நாயகப் பெருமானை இறைஞ்சுகிறேன்.

குளக்கோட்டன் துதி

பார்தாங்கும் கோயிலும் பொன் மண்டபமுங்
கோபுரமும் பரற்கு நாட்டி
ஏர்தாங்கும் மாயனுக்கும் அலங்கார ஆலயம்
ஒன்று இயற்றி முற்றும்
கார்தாங்கும் திருக்குளமும் பாவ நாசநற்
சுனையுங் கண்ட கண்டன்
சீர்தாங்கும் குளக் கோடனெனுஞ் சோழ
கங்கனை நம்சிந்தை வைப்பாம்

ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம்


# வேண்டிய நேரம் வெயிலும் மழையும் தருவார் ஆதிகோணநாயகர்

தொன்மைச் சிறப்பு வாய்ந்ததான தமிழ் கிராமமான தம்பலகாமத்திலே எழுந்தருளியிருக்கும் ஆதி கோணேஸ்வரர் தேவஸ்தானம் புராதன வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

பொன்னாசையும் மண்ணாசையும் கொண்ட மதவெறி படித்த போர்த்துக்கேயர் 1624ம் ஆண்டு திருக்கோணலையைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்த ஆலயமும் தரைமட்ட மாக்கப்பட்டது. அங்கு திருத்தொண்டினை மேற்கொண்டிருந்தோர் ஆலய திருவுருவ விக்கிரகங்களைக் கொண்டு சென்று ஏனைய பகுதிகளிலும், காட்டிலும் மறைத்து வைத்திருந்தனர். இவ்வாறான விக்கிரகங்கள் சில தம்பலகாமத்திற்கு மேற்கேயுள்ள சுவாமிமலை என்று அழைக்கப்படும் இடத்தில் மறைத்து வைக்கப்பட்டு வழிபடப் பெற்றன.

அச்சமயம் தம்பலகாமம் வாசிகள் கோணமலைக் கிழக்கு பெறசுவாமிமலைக் காட்டிற்கு செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் வேளை சுவாமி மலையில் விக்கிரகத்துடன் செப்பெடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு தம்பலகாமத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு அவை பிரதிஸ்டை செய்யப்பட்டன. கோணேசர் குடிகொண்டதன் நிமித்தம் அவ்விடம் கோயில் குடியிருப்பு என அழைக்கப்பட்டு வருகிறது. இவ்விக்கிரகம் வைக்கப்பட்ட கோயில் அரசனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. செப்பேட்டின் வழிமுறைப்படியே கோயில் நடைமுறைகளும், செய்கை முறைகளும் நடைபெற்று வந்தன.

தம்பலகாமம் கிராமம் திட்டி திட்டியாக ஒவ்வொரு திடலாக அமைந்துள்ளது. இதன்



இயற்கை அமைப்பு இப்படிக் காணப்படுகிறது. குளக்கோட்டு மகாராஜாவின் வேண்டுகோளின் பேரில் கந்தளாய் குளத்தை கட்டிய பூதங்கள் மண் அள்ளிப்போட்ட கூடையைத் தட்டி விட்டதனால் தான் இப்படித் திட்டி திட்டியாக அமைந்துள்ளது என்பது கருத்து.



மு.கோ.செல்லராசா
கௌரவ காரியதரிசி ஆலயபரிபாலனசபை

சிவத்தின் மகிமையை விளங்க வைக்கும் இத்தலத்தின் சிறப்பு மேலும் இக்கும்பாபிஷேகத்தின் மூலம் சுடர் விட்டுப் பிரகாசித்து, பக்தர்கள் சென்று வழிபட்டு துயர்களைத் துடைக்கும ஆலயமாக மீண்டும் வெளிக்கொணர்வதற்கு எம்பெருமானின் திருவடியினை சிரந் தாழ்த்தி வணங்குகிறேன்.

# மேடத்தில் குரு சனி



# சாதகமா ? பாதகமா ?

வானத்துக் காட்சிகள் உலகியல் நிகழ்வுகளுக்கு உயிர் கொடுப்பனவாக அமைகின்றன். கிரக நிலைகள் சாதகமாக அமையாத வேளைகளில் உலக சமநிலைக்கும், அமைதிக்கும் பங்கம் ஏற்படுகின்றது.

உலகிலே தோன்றுகின்ற சீவராசிகள் ஒவ்வொன்றும் ஏழு கிரகங்களான சூரியன்,சந்திரன்,செவ்வாய்,புதன்,குரு,சுக்கிரன்,சனி ஆகியவற்றில் ஒன்றின் ஆதிக்கத்தைப் பெற்றே பிறக்கின்றன. கன்னி ராசி உதயமாகும்போது ஜனனமாகும் ஒருவருக்கு புதன் கிரகத்தின் ஆதிக்கம் அமைகிறது. மகர ராசி உதயமாகும் வேளையில் பிறப்பவர்க்கு சனீஸ்வரனின் ஆதிக்கம் அவரைச்சார்கிறது.


ஒருவர் பிறக்கும்போது உதயமாகும் இராசியே இலக்கினம் ஆகும். புதன்,சனி ஆகிய கிரகங்கள் வானத்தில் சேர்க்கை பெறும் காலங்களில் இக்கிரகங்கள் இலக்கினாதிபதியாக பிறந்தவர்களிடையே சந்திப்பும், கருத்து வேறுபாடும், சில வேளைகளில் மோதல்களும் நிகழும்.

கிரக கோசாரத்தைக் கொண்டு வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை, தீமைகளை அறிவதற்கு ஒருவரது ஜாதகத்தில் சந்திர இலக்கினாதிபதி, இலக்கினாதிபதி ஆகிய இரு கிரகங்களின் மீது மற்றைய கிரகங்களின் நோக்கினால் ஏற்படுகின்ற தாக்கத்தை ஆராய்ந்தே துல்லியமான பலன் எதுவென்றும், எப்போது, எந்தத் திகதியில் நிகழும் என்பதை ஜோதிட சாஸ்திர வல்லுனர்களால் கூறக்கூடியதாக இருக்கின்றது.

சூரிய கிரக மண்டலத்தில் சூரியனுக்கும் பூமிக்குமிடையே புதன், வெள்ளி ஆகிய கிரகங்களும், பூமிக்கப்பால் செவ்வாய், குரு, சனி ஆகிய கிரகங்களும் சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. குரு, சனி ஆகிய கிரகங்கள் சூரியனுக்கு அதிக தூரத்தில் காணப்படும் போதிலும், இவை எவ்வித தொலைநோக்கிக் கருவிகளின் உதவியின்றிச் சாதாரண கண்களால் பார்க்கக்கூடிய கிரகங்களே.

வியாழன் எனப்பெயர் கொண்ட குரு கிரகங்களிலே அதிக சுப பலனைக் கொடுக்கக் கூடியவர். குருவின் பார்வை பாபக்கிரகங்களில் ஏற்படுவதால், பாபக் கிரகத்தினால் ஏற்படும் தோஷம் நிவர்த்தியாகும் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன.

இப்படிப் போற்றப்படும் தேவ குருவின் பாதையில் துக்கம், மரணம், விதி என்பவைக்கு அதிபதியான சனீஸ்வரன் குறுக்கிடுவதால் ஏற்படும் விளைவுகள் எப்படியாக இருக்கும் என்பதை எவராலும் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.





விக்னேஷ்

இவ்வாண்டு மேமாதம் 26ம்தேதியில் குரு பகவான் மேட ராசியில் பிரவேசம் செய்கிறார். யுத்த காரணான செவ்வாயின் மேட ராசியில் நீசமடைந்திருக்கும் சனீஸ்வரனை நோக்கி குரு பகவான் நகர்ந்து செல்வது நன்மையானதா?. இதை அறிவதற்குக் கடந்த காலத்தில் எப்போதாவது குரு சனி சேர்க்கை மேட ராசியில் ஏற்பட்டதா என்று அறிதல் பொருத்தமானது. குரு சனி சேர்க்கை மேட ராசியில் 1940 ஆகஸ்ட் மாதம்9ம் திகதி நிகழ்ந்தது.

குரு பகவான் 1939ம் ஆண்டு ரேவதி நட்சத்திரத்தில் மீன ராசியில் இருக்கும்போது ஜேர்மன் நாட்டின் தலைவரான கிட்லர் போலந்து நாட்டின் மீது 1-09-1939 படையெடுத்தான். கிட்லரின் இனவெறி, ஆட்சி வெறி, ஆதிக்க வெறி இரண்டாவது உலக யுத்தத்துக்கு வித்திட்டது. தொடர்ந்து கிட்லரின் படையெடுப்பால் நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகள் ஜேர்மனிடம் 9.04.40ல் சரணடைய வேண்டியதாயிற்று. பிரான்ஸ் நாடும் 22.04.40ல் ஜேர்மனால் கைப்பற்றப்பட்டது. பிரித்தானிய நாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் கிட்லர் தோல்வி அடைய வேண்டியேற்பட்டது.

இதேபோல் கிட்லரின் ரஷ்யாவின் மொங்கோவைக் கைப்பற்றும் முயற்சியும் தோல்வியில்தான் முடிவடைந்தது. பிரித்தானியா, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியால் முடிவில் ஜேர்மனிக்கு தோல்வியை ஏற்படுத்தக்கூடியதாக் அமைந்தது ஐந்து ஆண்டுகளாக நடைபெற்ற யுத்தத்தின் இறுதியில் ஜேர்மன் பேர்லின் நகரம் ரஷ்யாவினால் 24.04.45ல் கைப்பற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து 30.04.1945ல் கிட்லர் தற்கொலை செய்து தன்வாழ்வை முடிக்க வேண்டிய நிலை. இதே வேளையில் ஆசியாக் கண்டக்கின் மீது யப்பான் நாடு தன் ஆதிக்கத்தை பரவலாக்கும் முயற்சியை முடிவிற்கு கொண்டு வரும் நோக்கத்தில் அமெரிக்கா வேறு வழியின்றி யப்பானின் கிரோசிமா என்ற இடத்தில் 6.08.45ல் அணுக்குண்டு ஒன்றைப் போட்டது. இன்னொரு அணுக்குண்டும் 14.08.45ல் யப்பானில் உள்ள நாகசாகி என்ற இடத்தில் போடப்பட்டதை அடுத்து இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்தது. இந்த யுத்தத்தால் உலக சனத்தொகை 500 இலட்சம் மக்களால் குறைந்தது.

1940 ஆகஸ்டில் மேட ராசியில் நிகழ்ந்த குரு சனி சேர்க்கை இந்த யுத்தத்தின் ஆரம்பத்துக்குக் காரணமாயிருந்தது.

2000ம் ஆண்டு மேமாதம் 30ம் திகதி மேட ராசியில் இலங்கை நேரப்படி 13 மணி 44 நிமிடத்தில் குரு பகவான் சனீஸ்வரனுடன் சேர்ந்து கொள்கின்றார். இக்கிரக சேர்க்கையின் விளைவு உலக அமைதிக்கு சாதகமாக இருக்காது.

| | | | |
|---|---|---|---|
| | குரு சனி | | |
| | 30-05-2000 13k-44ejkp (, yqi; f Neuk) | | |
| | | | |
| | | | |

அரசியல்வாதிகளும், ஆட்சியிலும், பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களும் இக்கிரக சேர்க்கையின் தீய விளைவுகளைத் தவிர்க்கும் நோக்குடன் இன, மத, மொழி, நாடு என்ற வரம்பிற்குள் செயற்படாது ஆன்மீக சிந்தையுடன் செயலாற்றின் உலக அமைதிக்கு சாதகமாக அமையும்.

மீன குரு சனிசேர்க்கையால் தனு, மகர, கும்ப, மீன இராசியில் பிறந்தவர்களும் இந்த இராசிகளை இலக்கினமாக உடையவர்களும் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

சுபம்

# மனம் வெளுக்க வழியில்லையே!

சுப்பர் மார்க்கெட்டில் மாலாவைக் கண்ட பவானி மகிழ்ச்சி பொங்க "ஹாய்" என்று சொன்னபடி கையைப் பிடித்தாள்.மாலாவுக்கும் பவானியைக் கண்டதும் இனந்தெரியாத பூரிப்பு உண்டானது.

எவ்வளவு காலத்திற்குப் பிறகு எதிர்பாராத சந்திப்பு. கல்லூரிப்படிப்பை முடித்து இருவரும் கல்லூரியை விட்டுப் போனதும் இன்றுதான் முதல் சந்திப்பு.

இருவருக்கும் ஏற்பட்ட எதிர்பாராத மகிழ்ச்சியில் எதைப்பேசுவது எதைப்பேசாமல் விடுவது என்று தெரியாமல் மாறி மாறிப் பேசிக்கொண்டே இருந்தார்கள். மற்றக்கல்லூரித் தோழிகள் பற்றியும் படிப்பித்த ஆசிரியைகள் பற்றியும் பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

அப்போதுதான் நேரத்தை அவதானித்த மாலா"நான் போகணும் பஸ் போயிடும்" என்று விடை பெற்றாள். "நோ, நான் காரிலேயே விட்டுவிடுறன் வா" என்றாள் பவானி. இதுவரை மாலாஅனுபவித்த இன்பம் மறைந்தோடியது. பவானியிடம் கார் இருக்குது அதை அவளே ஓட்டுறாள் என்று தெரிஞ்சதும் தன் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தாள். இவ்வளவு நேரமும் கலகலப்பாகப் பேசியதுபோல் அவளால் பேச முடியவில்லை.

இருவரும் காரில் போகும் போது "முதல் என் வீட்டுக்குப் போய் ஏதாவது குடிக்கணும். இன்றைக்கு நல்ல நாள்" என்றாள் பவானி.

மாலா ஒன்றும் பேசவில்லை. இவளுக்கு எப்படி இந்த நிலை ஏற்பட்டது?கார் பங்களா இந்த வசதிகள் எப்படி ஏற்பட்டன என்ற எண்ணங்களே அவள் மனதை ஆக்கிரமித்தன. பவானி பேசிக்கொண்டே காரைச் செலுத்தினாள். அவளுடைய பேச்சு ஒன்றும் மாலாவின் காதில் ஏறவில்லை. தலையை ஆட்டியபடியே இருந்தாள். அவளுடைய அடி மனதில் தனக்கு இப்படி ஒரு ஆடம்பர வாழ்க்கை கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் உருவாகியது பவானி மேல் பொறாமைப் புயல் வீசியது.

## சந்நிதி சிறுகதை

பவானி வீட்டில் அவள் கண்ட வெளிநாட்டு ஆடம்பரப் பொருள்களும் கலர் டிவியும் பிறிஜும் அவள் பொறாமையை மேலும் அதிகரித்தன.

வீட்டிற்கு வந்ததும் அவள் மனம் அலை மோதிய வண்ணம் இருந்தது. பவானியின் ஆடம்பரமான வாழ்க்கையைச் சுற்றியே வட்டமிட்டது. சமையலறை வேலையில் மனம் ஓடவில்லை. தனது வீட்டையும் அவள் வீட்டையும் எண்ணி மனம் புழுங்கினாள்.

மாலையில் கணவன் வரும் நேரம் வழக்கமாக தேநீர் தயாரித்து வைத்திருப்பாள். இன்று அதைக்கூட மறந்திருந்தாள். ஆபிசில் இருந்து வந்த அவள் கணவன் சிவலிங்கம் வழக்கம் போல் வரும் வழியில் உள்ள அம்மன் கோயிலில் கும்பிட்டுத் திருநீறு பூசிக் கொண்டு வந்தான். ஆபிஸ் போகும் போதும் வரும் போதும் கும்பிட்டு விட்டுத்தான் சென்று வருவது வழக்கம்.

**வில்வம் பசுபதி**

கேற்றைத்திறந்து போகும் போது வீட்டு வெளிவிறாந்தையில் மாலா நிற்பதைப் பார்த்தான். அவளுடைய முகத்தில் நிலவிய அசாதாரண அமைதியைக் கண்டு கலவரம் அடைந்தான். ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்க வேண்டும் என எண்ணினான். அறைக்குள் போய் உடைகளை மாற்றி வெளியே சிவலிங்கம் வந்த போது இண்டைக்கு பவானியைக் கண்டேன் என்றாள் மாலா.



அவனுக்கு யார் பவான் என்று புரியவில்லை "பவானியா" யாரது? என்று கேட்டான்.

"என்னோட படிச்சவ படிக்கேக்க தலை நிறைய எண்ணை அப்பி நெத்திலை குறியும் வைச்சு வருவா சரியான பட்டிக்காடு இப்ப அவவைப் பாக்கேலாது காரென்ன பங்களா என்ன பிரிட்ஜ் ரிவி என்ன ஆளே சரியா மாறிட்டா" மூச்சு விடாமல் சொன்னாள்.


சிவலிங்கத்துக்கு இப்ப புரிந்து விட்டது. மனைவிக்கு ஏதோ தலைவலி என்று நினைத்தவன். தலைவலி இல்லை அது நெஞ்சுவலி. பவானி தன்னிலும் பார்க்க உயர்ந்த நிலையில் இருப்பதைப்பார்த்து இவள் நெஞ்சு கொதிக்குது.

'எல்லாம் அவர் அவருக்கு அமைஞ்சது தான் நடக்கும்" என்றான்.

இப்படி வேதாந்தம் பேசத்தான் உங்களுக்குத் தெரியும் பவானியின் புருசனும் உங்களைப் போல் ஒரு ரெக்னிக்கல் ஆபீசர் தானே அவரால் இவ்வளவு செய்ய முடியுமென்டால், அது அவரது கெட்டித்தனம் உங்களைப் போல விபூதியும் சந்தனமும் அப்பிக் கொண்டு கடைசியிலை எண்ணத்தைக் கண்டது.

மாலா பொரிந்து தள்ளினாள். சிவலிங்கம் பொறுமையாகக் கேட்டான். அவள் வார்த்தைகளைக் கேட்கும் போது, மனைவிமேல் கோபத்திற்கு பதில் பரிதாபமே ஏற்பட்டது.

இதையெல்லாம் ஏன் எனக்குச் சொல்கிறாய் எல்லோரும் பவானியின் கணவன் போல இருக்க முடியாது. என்றான்.



ஏன் இருக்க முடியாது வலியவாற சீதேவியை கை நழுவ விட்டிட்டு முடியாது என்று சொல்லறியள். காரில் கொண்டாக்டர் சங்கரலிங்கம் வீடுதேடி வந்தாரே, ஐந்து லட்சம் கொண்ராக்ட் வவுச்சரைப் பாஸ் பண்ணச் சொல்லி கெஞ்சினாரே. கையிலே ஐயாயிரம் வைச்சுக்கொண்டல்லா கெஞ்சினார். நீங்க அவரை கலைச்சு விட்டியள். எதுக்கும் துணிவும், மூளையும் வேணும என்றாள்.

மாலாவின் வார்த்தைகள் சிவலிங்கத்திற்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தன. லஞ்சம் வாங்கச் சொல்லியல்லவா வற்புறுத்துகிறாள். மனைவிக்குப் பொறுமையாக விளக்கினான்.

'மாலா!காரில் வந்தது பள்ளிக்கூடம் கட்டும் கொண்டாக்டர். கட்டிடவேலை முடிய வில்லை. முடிந்து விட்டது என்று எப்படி பேமெண்ட் றெக்கமெண்ட் பண்ணுறது. அது பெரும் பிழையல்லவா? மனச்சாட்சி வேண்டாமா.' என்றான்.

'மனச்சாட்சியும் நீங்களும்.பிழைக்கத் தெரியாத அசடுகள் சொல்லும் சொல;"என்று சொல்லிவிட்டு கோபத்துடன் உள்ளே போனாள்.

"என்னோட படிச்சவ படிக்கேக்க தலை நிறைய எண்ணை அப்பி நெத்திலை குறியும் வைச்சு வருவா சரியான பட்டிக்காடு இப்ப அவவைப் பாக்கேலாது காரென்ன பங்களா என்ன பிரிட்ஜ் ரிவி என்ன ஆளே சரியா மாறிட்டா" மூச்சு விடாமல் சொன்னாள்.

'தாயே ஈஸ்வரி என்ன சோதனையம்மா" என்று அவன் மனம் உருகியது. அன்றைய பொழுது அமைதியற்றதாகக் கழிந்தது. மனைவியின் சொற்களாலும், செயல்களாலும் அவன் உள்ளம் மிகுந்த வேதனையடைந்து. அவனால் நிம்மதியாக உறங்க முடியவில்லை.

அடுத்த நாள் அவன் ஆபீசால் வந்த போது மாலா ஒருவிதமான மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். சிவலிங்கத்திற்கு வியப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது. அவனைக்கண்டதுமே 'இண்டைக்கு சொனி பார்த்தன;"என்று தொடங்கினாள்.

நேற்று பவானி, இன்றைக்கு சொனி யார் இந்த சொனி? என்று எண்ணியவாறு அவளும் உன்னோடு படித்தவளா?- என்று கேட்டான்.

அசட்டுக்கேள்வி. சொனி என்கிறது டிவி. கலர் டிவி பதினாறாயிரம். ஐயாயிரம் கட்டலாம். நாளைக்கு வாறன் எண்டு சொன்னான்- என்றாள்.

நெஞ்சு திக் என்றது சிவலிங்கத்திற்கு. சர்வ சாதாரணமாக சொல்லும் இந்த அறிவற்ற பெண்ணை என்ன செய்வது, என்று கவலையுடன் சிந்தித்தான். அவன் யோசிப்பதைப் பார்த்த மாலா எப்படியாவது கடன் எடுத்து ஐயாயிரம் கட்டுவம் பிறகு மாதா மாதம் ஆயிரம் தானே என்றாள்.

ஐயாயிரத்திற்கு மாதம் இருநூறுரூபா வட்டி அது தவிர மாதா மாதம் ஆயிரத்துக்கு எங்கை போவது இந்த ஐயாயிரத்தை எப்படித் திருப்பிக் கட்டுவது நகை அடகு வைச்சுதான் அதுவும் எடுக்கணும் என்று பொறுமையாக சொன்னான்.

பொறுமை இழந்தாள் மாலா உங்களாலை எதுவுமே முடியாது. எதுக்கும் பயந்து சாகிறது என்று சத்தம் போட்டாள்.

நீ சொல்வது சரி நான் கடனுக்குப் பயப்படுகிறேன். நேர்மையற்ற செயல் செய்ய பயப்படுகிறேன். உண்மையில் இப்ப உனக்குப் பயப்படுகிறேன. தவறான வழிக்குப் போகத் தூண்டும் மனைவியைக் கண்டு பயப்படாமல் என்ன செய்வது – என்றான்.

இவன் சொன்னதைக் கேட்க மாலா இல்லை. அவள் அறைக்குள் போய் படுத்துக் கொண்டாள்.

சிவலிங்கம் அவள் போவதையே பார்த்துக் கொண்டு செய்வதறியாது இருந்தான் .

அன்று தொடக்கம் இருவருக்கும் உள்ள அந்நியோன்யம் அற்றுப்போனது. மாலா கணவனிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். ஒரு கூரைக்குள் குடியிருந்தும் வேற்று மனிதரைப் போல் இருந்தனர்.

மாலாவின் போக்கு சிவலிங்கத்திற்குப் பெரும் மனவேதனையைக கொடுத்தது. மனம் நிம்மதியின்றி தவித்தது. அவனுடைய துன்பம் அவனுடைய முகத்தில் பிரதிபலித்தது. தினசரி மாலையில் கோயிலுக்குப் போனான். பெரும் பொழுதை கோயிலிலேயே கழித்தான். இதை அவதானித்த அவன் நண்பன் சுதாகர் ஏண்டா

கோயிலை குத்தகைக்கு எடுத்திட்டாயா, எப்ப பார்த்தாலும் இங்கை நிக்கிறாய்– என்று கேட்டான்.

மனம் அமைதியின்றி தவித்தால் எங்கே போவது? கோயிலைத்தவிர வேறு இடம் ஏது? என்றான் சிவலிங்கம். சுதாகருக்கு ஒன்றும் புரியவில்லை ஏதோ பிரச்சினை என்று எண்ணி மௌனமாக அவனையே பார்த்தான்.

என் மனைவியை சில அரக்கர்கள் படாத பாடு படுத்துகிறார்கள். பாதித்திருப்பது நான்.

என்னப்பா எனக்கு ஒன்றும் புரியேல்லை.

பாரதியாரின் பாடல் உனக்குத் தெரியாதா? கலகதரக்கர் பலர் எங்கள் முத்துமாரியம்மா

கருத்தில் புகுந்துவிட்டார் எங்கள் முத்துமாரி யம்மா'

ஏங்கும் பாரதியாரின் நினைவு வந்தது. அவன் சிவலிங்கத்தின் நிலையை எண்ணிப் பரிதாபப்பட்டான்,

சிவலிங்கத்திற்கும் மாலாவுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டு மூன்று கிழமைகளுக்கு மேல் ஆகி விட்டன. அன்று மாலை சுப்பர் மார்க்கெட்டுக்குப் போன மாலா பவானியைக் கண்டாள், மாலாவைக் கவனியாத பவானி ஏதோ பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தாள்.

பவானியைக் கண்டதும், வீட்டிற்கு இவளுடைய காரிலே போகலாம் என்று எண்ணினாள். அவளிடம் போய் அவள் கையை தொட்டதும், பவானி திரும்பினாள். மாலா அதிர்ந்து போனாள் அன்று கண்ட அதே பவானியா இவள்? முகம் வாடி, உடல்மெலிந்து , வருத்தக்காரி போல் காட்சி அளித்தாள்.

நமது உள்ளத்திலே கலகம் செய்கின்ற பல அரக்கர்கள் இருக்கின்றார்கள்.வஞ்சகம், சூது, அவா, பொறாமை, வெகுளி தான் இந்த அரக்கர்கள். இவை மனதில் புகுந்தால் கலகம்தான், என் மனைவியின் மனதில் பொறாமை, அவா குடி கொணடுவிட்டன. அவள் மனம் வெளுக்கவும் வழி இல்லையே" என்று ஏக்கத்துடன் சொன்னான்.

நமது உள்ளத்திலே கலகம் செய்கின்ற பல அரக்கர்கள் இருக்கின்றார்கள் .வஞ்சகம், சூது, அவா, பொறாமை, வெகுளி தான் இந்த அரக்கர்கள். இவை மனதில் புகுந்தால் கலகம்தான், என் மனைவியின் மனதில் பொறாமை, அவா குடி கொணடுவிட்டன. அவள் மனம் வெளுக்கவும் வழி இல்லையே" என்று ஏக்கத்துடன் சொன்னான்.

சுதாகருக்கு 'உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா. என்ற பாடல் இப்போது நினைவுக்கு வந்தது. துணி வெளுக்க மண்ணுண்டு தோல்வெளுக்க சாம்பலுண்டு, மணி வெளுக்க சாணையுண்டு, மனம் வெளுக்க வழியில்லையே என்று

'என்ன பவானி காய்ச்சலாக இருந்தாயா மெலிந்து விட்டாயே"என்று கேட்டாள்.

இல்லையே உனக்கு அப்பிடித் தெரியுது. என்றாள்பேச்சில் முந்திய உற்சாகம் இல்லை. கலகலப்பான பேச்சும் இல்லை. போகும் போது உன் காரிலேயே வாறன், என்றாள மாலா.

காரிலே வரேல்ல. நானும் பஸ்தான் என்றாள்.பஸ்சா? ஏன் கார் ரிப்பேரா. பவானிக்கு இப்பபோது கண் கலங்கி விட்டது அழுகையே வந்து விடும் போல் இருந்தது.

மாலா!என் வாழ்க்கை சரிந்து விட்டது.என் கணவரை லஞ்சம் வாங்கியதாக

ஏழைகளிடமும்,துன்பப்படு பவர்களிடமும்,உதவியின்றி தவிப்பவர்களிடமும்,கருணையாய் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். இந்த இரக்ககுணம் இடைவிடாமல் பெருகட்டும். பிறர் துன்பம் தன்னுடையதாக எண்ணி, அதைத் தவிர்க்க முயற்சி செய்து, அவர்களைத் தவிப்பிலிருந்து கரையேற்றுங்கள்.

- பாபா -

கைது செய்து ரிமாண்டில் வைத்து விட்டார்கள்.அவரை வெளியில் எடுக்க காரை வித்தேன் நகைகளை வித்தேன்.வீட்டு சாமான்களையும் வித்தேன்.நண்பர்கள் எல்லோரும் எட்டப் போய்விட்டார்கள். உறவினர்கள் விலக விட்டார்கள். வீடுமாறி இப்போது ஒரு சிறிய வீட்டில் இருக்கின்றேன். இந்த அதிர்ச்சியில் கணவருக்கு மாரடைப்பும் வந்து விட்டது. எனக்கு கார் வேண்டாம், பங்களாவேண்டாம், எனக்கு எனது கணவர் சுகமாய் இருந்தால் போதும், சிறுகுடிசையில் கூட ஆனந்தமாய் இருப்பேன். நல்லூர் முருகனிடம் அதைத்தான் தினமும கேக்கிறேன் முருகன் எனக்கு அருள் புரிவார்- என்று சொல்லும் போதே அவள் துக்கத்தை கட்டுப்படுத்த முடியாமல் சேலைத் தலைப்பால் முகத்தை மூடி விக்கி அழுதாள்.

அன்று பவானியைக் கண்டு பொறாமைப்பட்ட மாலா இன்று பவானியின் நிலை கண்டு உண்மையில் மனம் வருந்தினாள். அவள் கண்கலங்க காலம் மாறும்இருவருமே பஸ்சில் போகலாம் என்று ஆதரவாக அவள் கையைப் பிடித்துக் கொண்டு பஸ்நிலையத்தை நோக்கி போனாள்.

மாலா பஸ்சில் போகும் போது கணவன் சிவலிங்கத்தின் நினைவிலேயே மூழ்கியிருந்தாள். தான் லஞ்சம் வாங்கச் சொல்லித் தூண்டியதையும், அதற்கு அவன் மறுத்ததையும் எண்ணிப்பார்த்தாள். அவனுடன் பேசுவதை நிறுத்தி, அவன் மனதை புண்படுத்தியதை எண்ணிப் பார்த்தாள், உடனேயே அவனைப் பார்க்க வேண்டும் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என அடக்க முடியாத அவா ஏற்பட்டது.

பஸ்சை விட்டு இறங்கியவள் நேரே அம்மன் கோவிலுக்கு போனாள். அங்கு சிவலிங்கம் வெளிமண்டபத்துப் படியில் இருந்து எதையோ வாசித்துக் கொண்டிருந்தான். தெய்வத்தை நேரில் கண்டதுபோல் இருந்தது மாலாவுக்கு. ஓடிப்போய் அவன் கால்களைத் தொட்டாள். யாரோ காலைத் தொடுவதை உணர்ந்து நிமிர்ந்த சிவலிங்கம் கண்கள் கலங்கத் தன் முன் நிற்கும் மாலாவைக் கண்டு திகைத்தான்.

மாலா ஒன்றும் பேசாது அவன் முகத்தையே பார்த்தாள். அவளால் பேச முடிய வில்லை. கண்கள் மன்றாடின. மன்னிப்பு கேட்டன.கசிவலிங்கம் எழுந்தான் ஒன்றுமே பேசாது அவள் கண்களைத் துடைத்து விட்டு அவள் கைகளை அன்புடன் பிடித்து வீட்டிற்கு அழைத்து போனான்.

மனைவியின் மனம் வெளுக்க அம்பாள் அருள்பாலித்து விட்டாள் என எண்ணிய சிவலிங்கம், நின்று அம்மனை வணங்கி விட்டு, மனைவியுடன் வீடு சென்றான்.

---

உலகத்து நாயகியே—எங்கள் முத்து
மாரியம்மா,எங்கள் முத்து மாரீ!
துணிவெளுக்க மண்ணுண்டு—எங்கள்முத்து
மாரியம்மா,எங்கள்முத்து மாரீ!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு—எங்கள்முத்து
மாரியம்மா,எங்கள்முத்து மாரீ!
மணிவெளுக்கச் சாணையுண்டு—எங்கள்முத்து
மாரியம்மா,எங்கள்முத்து மாரீ!
மனம்வெளுக்க வழியில்லை—எங்கள்முத்து
மாரியம்மா,எங்கள்முத்து மாரீ!
(பாரதியார்)

## திருத்தம்பலகாமம்
# ஆதி கோணநாயக சுவாமி



உம்பருக் கரியாய் போற்றி !<br>
  உமையவள் பாகா போற்றி !<br>
நம்புவார் உள்ளே நின்று<br>
  நடம்புரி நாதா போற்றி !<br>
அம்பலத் தரசே போற்றி !<br>
  அருட்பெருஞ் சுடரே போற்றி !<br>
தம்பல காமத்துள் வாழ்<br>
  தனிப்பரம் பொருளே போற்றி !

- பெ. பொ. சி.

## பகவத் கீதை வெண்பா தந்த
## புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
# நூற்றாண்டு நினைவு



வெண்பாவில் கீதை விளக்கேற்றிச் செந்தமிழர்
பண்பா லுயரப் பணிசெய்தான் - வெண்பாவில்
தேர்ந்தபுக ழேந்தி தெருவிற்கை யேந்தக் கவி
வேய்ந்த பெரியதம்பி.

*கழகப் புலவர்*
பெ. பொ. சிவசேகரனார்

# சந்நிதி சோதிடம்



அன்புக்குரிய வாசகர்களே!

ஒன்பதாண்டு காலம் ரிஷி கேசத்தில் வாழ்ந்து யோக வாழ்க்கையில் ஈடுபட்ட வரும், ''விக்னேஸ்;'' என்ற பெயரில் பிரபல்யமடைந்துள்ள சோதிட ஆய்வாளரும; ''வான்மதி'' சோதிட சஞ்சிகை ஆசிரியருமான திரு விக்னேஸ்வரன் அவர்கள்சந்நிதி வாசகர்களின் சோதிடம் தொடர்பான சந்தேகங்களுக்கு அல்லது பிரச்சனைகளுக்கு விளக்கம் அளிக்க முன் வந்துள்ளார்.

சந்நிதி அன்னாருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

வாசகர்கள் தமது பிரச்சினையைச் சுருக்கமாக ஒரு தாளில் தெளிவாக எழுதி, பின்வரும் கூப்பனை நிரப்பி, சுய விலாசமும், முத்திரையும் இடப்பட்ட கடித உறையுடன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்
''சந்நிதி''
39, 36வது ஒழுங்கை
கொழும்பு – 06

சந்நிதி சோதிடம்

ஆசிரியர்
''சந்நிதி''
முழுப்பெயர்:.................................................................
பிறந்ததிகதி:..........................நேரம்:..........................
விலாசம்:.......................................................................
...................................................................................
இத்துடன் இணைத்துள்ள எனது பிரச்சனைக்கு சோதிட ஆய்வாளர் ''விக்னேஸ்'' அவர்களின் பதிலை எதிர்பார்க்கிறேன்.
திகதி ..............................

..............................
கையொப்பம்

பேரன்புக்குரிய வாசகர்களே,

பல்சமயக் கருத்துக்களை ஏந்தி வரும் பேழையாக ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழி இதழ்கள் உருவாக வேண்டும் என்ற நெடு நாளைய எண்ணம் இறையருளாற் கை கூடியுள்ளது. இவ்விதழ் காலாண்டிதழாக தறபோது வெளிவந்துள்ளது.

இவ்விதழ் தொடர்ச்சியாக மலர்ந்து பல்சமய ஆன்மீக நறுமணம் பரப்பி நீடித்த பயன் தர சந்தா செலுத்தி ஊட்டமளிக்குமாறு கோருகின்றோம்.

காலாண்டுச் சந்தா:
இலங்கை ரூ 30 வெளிநாடு£ 1.00 (தபாற் செலவு உட்பட)

ஆண்டுச் சந்தா
இலங்கை ரூ120 வெளிநாடு£ 4.00 (தபாற் செலவு உட்பட)

காசோலை, காசுக்கட்டளை " Sivagami Ammal Publications" என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும். கீழ் வரும் படிவத்தை நிரப்பி காசோலை, காசுக் கட்டளையை இணைத்து எமது முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வண்ணம்
வே.வரதசுந்தரம்
ஆசிரியர்

சந்தா விண்ணப்பம்

ஆசிரியர்,
சந்நிதி,
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 06, இலங்கை.

நான் சந்நிதி காலாண்டிதழுக்கு காலாண்டு ஆண்டுச் சந்தா செலுத்த விரும்பி இத்துடன் ரூபா ......................க்கான காசோலை, காசுக் கட்டளை அனுப்புகிறேன்.

அனுப்ப வேண்டிய முகவரி :
.........................................................................
.........................................................................
.........................................................................

| காசோலை காசுக் கட்டளை இல | வங்கி/; தபால் நிலையம் | திகதி |
|---|---|---|
| | | |

..............................
கையொப்பம்

* எமது மகுடத்தில் மற்றுமோர் மாணிக்கம்!

* நாம் கூரைத்தகடுகள், தட்டத்தகடுகள் உற்பத்தியில் முன்னோடிகள்

* எங்கள் உற்பத்தி, சந்தையில் என்றுமே முதலிடம்.

* இலங்கையில் நாமே கூரைத்தகடுகள், தட்டைத்தகடுகளின் ஏகவெளிநாட்டு ஏற்றுமதியாளர்கள்.

* **SLS** அங்கீகாரம் பெற்றவர்கள்.

தற்போது

இலங்கையில் சர்வதேச தரச்சிறப்பு வாய்ந்த **IS** 09002 சான்றிதழ் பெற்ற ஒரே ஒரு அஸ்பெட்டஸ் சீமெந்து தகடுகள்.

**மஸ்க்கன்ஸ்**

175, ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தை
கொழும்பு - 12
தொலைபேசி: 325561

*காண்டம்*

*முனிவர்களால் எழுதப் பெற்ற காண்டம் என்னும்*

*நாடி வாக்கியத்தில்*

*உங்கள் பலா பலன்களை அறிந்து வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள்.*

*ரிஷி. எஸ். மணி*

*144 2/1, காலி வீதி*
*வெள்ளவத்தை*
*கொழும்பு.06*
*தொலைபேசி இல.586218*


இவ்விதழ் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் மகோற்சவ மலராக விரிகிறது. மலர் தயாரிப்பு - சிவநெறிச் செம்மல் வை. அநவரதவிநாயகமூர்த்தி

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி திருத்தம்பலகாமம் ஆதிகோணைநாயகர் கோயிற் திருக்குட முழுக்கு விழா இனிதே நிறைவேறியது. ஆதிகோணைநாயகர் படமும் இம்மலரில் வெளியாகி உள்ளது.



சமய சுதந்திரத்திற்கான சர்வதேச சங்கத்தின் (I. A. R. F.) கிளையொன்றை 25.03.99 அன்று மாலை 4 மணிக்கு வெள்ளவத்தை சின்சபா ஹோட்டலில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட போது, முது பெரும் எழுத்தாளர், சிவநெறிச் செம்மல் திரு. வை. அநவரதவிநாயகமூர்த்தி அவர்கள் மங்கள விளக்கேற்றி வைப்பதையும் அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் பி. எஸ். டாட்டா, டாக்டர் மும்தியாஸ் அலிகான் மற்றும், I. A. R. F. இலங்கைக் கிளையின் தலைவர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, செயலாளர் திரு. கே. சிவஞானம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
மகோற்சவ மலர்





Edited by : V. Varathasuntharam, Published by : Sivagami Ammal Publications, 39, 36th Lane, Wellwatte. Sri Lanka. Tel. : 596253.
Printed by : Unie Arts (Pvt) Ltd, No. 48 B, Bloemendhal Road, Colombo - 13. Tel.: 330195. Rs. ரூபா. 30/-